லிவர் க்யூர் கொடுங்கள்

எந்த வைத்திய முறைகளிலும் குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டிகளுக்கு தகுந்த வேறு மருந்து இல்லையென பிரபல டாக்டர்களால் கருதப்படுகிறது. அவர்கள் எல்லோரும் ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் லிவர்க்யூர்த்தான் உபயோகிக்க சிபார்சு செய்கிறார்கள்.

மோசமான போலி மருந்து களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாபூர், மதராஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

48, பெரிய தெரு, கும்பகோணம்.

காப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று சீட்களை உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.



மழை ஜலம் போவதற்கான குழாய்கள் & பிட்டிங்குகள்

எல்லா நிலைகளுக்கும், அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்பட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றுமில்லையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லேட் காஸ்டிங்ஸ் கம்பெனியார்கள் பல வருஷங்களாக வார்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

ELC-2.

காட்லாகும், விலை விவரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.
தி ஈஸ்டர்ன் லேட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

டோங்ரேயின் பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் I 2 0 0
இரண்டாம் பாகம் ரூ. 2. மூன்ரும் பாகம் 2.
(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாரருக்கு ரூ. 4.)
மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2. சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, லைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

குறைந்த விலையில் கொசு வலைகள்

எமது வலைகள் அழுத்தமானவை. நான்கு முனைகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

நீளம்	அகலம்	உயரம்	சாதா ரூ.	உயர் ரூ.	சிறந் ரூ.
6 அடி	$3\frac{1}{2}$ அடி	$3\frac{1}{2}$ அடி	2-0	2-4	3-10
6 ,,	4 ,,	4 ,,	2-4	2-8	4-2
$6\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	2-8	3-0	5-2
7 ,,	5 ,,	5 ,,	3-0	3-8	6-0
$7\frac{1}{2}$,,	6 ,,	6 ,,	3-8	4-0	7-2

மூன்று சேர்ந்தாற்போல் வாங்கினால் 6 அடி X 4 அடி X 4 அடி வலை ஒன்று இனும். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (H 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை: பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 32 6-9-'42 Price 2 Annas

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.



WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

கெய்ரோவில் சந்திப்பு

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் கெய்ரோவுக்கு வந்தபோது அவரை பஞ்சாப் பிரதம மந்திரி ஸர் சிக்கந்தர் ஹயத்கான் சந்தித்துப் பேசினார். பக்கத்தில் இந்திய சேனாதிபதி ஸர் ஆர்சிபால்ட் வேவலும் இருக்கிறார்.

மத்திய நிர்வாக சபை விசித்திரமாக அமைந்திருக்கிறது. சபை விரிந்து விட்டது. வேலையை உத்தேசித்தல்ல; ராஜீய காரணங்களை முன்னிட்டு. அதிகப் பேர் ஸ்தானம் வகிக்கின்றனர். வேலையைப் பங்கிட்டதில் வேலையைச் சிலருக்கும் வெட்டிப்பேச்சு பலருக்குமாக வீதித்துக்கொண்டனர். கூட்டுப்பொறுப்பு கிடையாது. கூடிப் பேசும் முறையுமில்லை. ஸ்தானம் வகிப்பவருக்கு யோக்கியதை பிரதானமல்ல: யோகமே பிரதானம். பதவிக் கேற்ற பொறுப்பு காணவில்லை; பொறுப்புக்கேற்ற பக்குவமில்லை. நிர்வாக சபைக்குள்ள மதிப்பே மங்கிவிட்டது.

பொறுப்பற்ற பதவி

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

வேலையைப்பற்றிக் கவலையில்லை; வழக்கம்போல் நடந்து வருகிறது. அன்றிருந்த மேனி அழியாமல் காத்து வருகின்றனர் அதிகார வர்க்கத்தினர். விசை இருக்கும் இடம் இன்று விசதமாகக் காண்கிறது. புது மெம்பர்களுக்கு வேலையில்லையே என்ற கவலையில்லை; உள்ள வேலையைச் செய்யாவிட்டாலும் கேள்வி முறையில்லை. அந்தந்த இலாகா மெம்பர்கள் தம் ஆதீனத்திற்குட்பட்ட விஷயங்களைச் சமயம் நேரும்போது விளக்குவது வழக்கம். கவர்ன்மெண்டின் முறையையும் திட்டத்தையும் அறிந்து கொள்ள இடமிருந்தது. அதெல்லாம் மாறிவிட்டது.

எதைப்பற்றியும் யாரும் பேசலாம் என்ற நியதி ஏற்பட்டு வருகிறது. கவர்ன்மெண்டின் கொள்கையை விளக்கினால் மதிப்புண்டு. சொந்த விருப்புவெறுப்புகளுக்குப் பிரசாரம் செய்ய வசதி தேடிக்கொண்டால் உள்ள மதிப்பு தான் குறையும். ஸர் பிரோஸ் கான் நூன் பாதுகாப்பு இலாகா மெம்பர். பாதுகாப்பைப் பற்றிப் பேசினால் காது கொடுக்கலாம். அரசியலைப்பற்றி பேசினால் அவருக்கு யோக்கியதை என்ன என்றே ஆராயப் புகுவர். டாக்டர் அம்பேட்கர் தொழில் மெம்பர்; தொழில் துறையில் உழைத்தவரல்ல; தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற முறையில் உத்தியோகம் கிடைத்தது. தாழ்த்தப்பட்டவரின் உரிமைகளை காப்பாற்றுவது தமது கடமையென்று நினைத்துக்கொண்டு விட்டார். அவர்கள் பால் அதீதமான கோரிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் சமாசார மெம்பராக அமர்ந்தார். ஏதோ கனவு கண்டு கொண்டு அங்கே சென்றார். மூன்றே முக்கால் நாழிகையில் குட்டு வெளியாகி விட்டது. சமாசாரத்திற்கும் அப்பெயர் கொண்ட இலாகாவுக்கும் உருவான சம்பந்தம் ஒன்றுமில்லை. வேலை யொன்றுமில்லை. நாளொன்றுக்குப் பதினைந்து நிமிஷ வேலை கூட இல்லையாம்! வேலையை வளர்த்திக்கொள்ளப் பார்த்தார். பலிக்கவில்லை; திரும்பி விட்டார். நிர்வாக சபையில் புதிதாக நுழைந்தவர்களுக்குள் கட்சித் தொடர்புள்ளவர் ஸ்ரீ ஆனே ஒருவர்தான். விநோதமான வேலையை அவருக் கிட்டனர். அவர் கண்டபலன் தீர்த்தாடனம் ஒன்றுதான்.

இதை யெல்லாம் கவனிக்கையில் மக்கள் சலிப்புறுவது சகஜம். நிர்வாக சபையில் பெரும்பான்மையோர் இந்தியர். அதிகாரம் சிறுபான்மையோரிடமே அடங்கிக் கிடக்கிறது; மாறவில்லை. அதிகாரத்தை வகிக்க லாயக்குள்ளவர்களிடம் ஒப்படைத்தாலொழிய நிலைமை திருந்தாது. பொறுப்புள்ள கவர்ன்மெண்டு என்ற பெயர் அதற்குத்தான் தகும்; பிரதிநிதித்வம் வாய்ந்த கவர்ன்மெண்டுக்குப் புதிய அர்த்தம் கற்பித்து வருகிறார்கள். நாட்டைச் சமூகவாரியாகப் பிரித்து சமூகத்திற்கொரு பிரதிநிதி என்பது அர்த்தமல்ல. அது அனுதிக் கொள்கையையே பழிப்பதாகும். சமூக மாத்சர்யங்களைக் குத்திக் கிளப்பவே அது உதவும். எல்லாச் சமூகங்களின் பொதுவான நன்மையை வளர்க்கும் சக்தி பிறக்காது.

அலசிப் பார்த்தால் மீண்டும் அடிப்படையான பிரச்னையே எழுகிறது. அதைச் சந்தேகமறத் தீர்க்க வேண்டும். கடத்தப் பிரயத்தனப்பட்டால் கசப்பே மலியும்; நல்லெண்ணத்தின் குறி சீமைப் பத்திரிகைகள் சிலவற்றில் காணக்கிடக்கிறது. இந்நாட்டிலே காணும் உணர்ச்சியின் ஆழத்தை அவை காணவில்லை. புண் புரையோடி விட்டது. பத்திலடங்காது ரத்தம் முறிந்து வருகிறது. வழி ஒன்று தான் உண்டு. மக்கள் பால் பேச உரிமையுள்ளவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும். நம்பினால் இடைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் சிரமமிராது. யுத்தம் நடத்த எவ்விதக் குந்தகமுமிராது. யுத்த முயற்சியும் பூர்ண புக்குவம் பெறும். சீக்கிரமாகவே யுத்தத்தில் வெற்றி காணலாம். சிரத்தை காட்டி வரும் பிரிட்டிஷாரும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இதை அறிவுறுத்த வேண்டும். சூத்திரக் கயிறு இங்கு இல்லை; சீமையில் தான் இருக்கிறது.

* * * * *

—(பின்பக்கம் பார்க்க)

சென்ற வார நிகழ்ச்சிகள்

மஹாத்மாஜியின் நிலைமை

"பாதுகாப்புச் சட்டப்பிரகாரம் சமீபத்தில் காவலில் வைக்கப்பட்ட மகாத்மா காந்தி, காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் இவர்களைப் பற்றி பின்வரும் தகவல் பிரசுரிக்கப்படுகிறது.

காந்திஜி ஒரு தனி வீட்டில் இருக்கிறார். அவர் சௌகர்யமாக இருப்பதற்கான சகல வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர் கோரும் வகையில் உணவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அவரது மனைவி அவருடனே இருக்கிறார். இன்னும் சில ஸஹாக்களும் இருக்கின்றனர்; காந்திஜியின் வைத்தியரும் கூட இருக்கிறார்.

காரியக்கமிட்டி மெம்பர்களும் தக்க விடுதிகளில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் வழங்கப்படுகின்றன. இந்திய வைத்திய இலாகா அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் அவர்கள் இருந்து வருகின்றனர். சொந்த விஷயங்களைப்பற்றித் தங்கள் குடும்பத்தினருக்குக் கடிதங்கள் எதழுவும் அநுமதிக்கப்படுகின்றனர்: அவர்களுக்குப் பத்திரிகைகளும் கொடுக்கப்படுகின்றன. எல்லோரும் சுகமாக இருக்கிறார்கள்" என்று பம்பாய் ஸர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.

* * * *

ஸ்ரீ தேவதாஸ் காந்தி விடுதலை

"ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி, பிரசுரகர்த்தர் ஸ்ரீ தேவிபிரசாத் சர்மா, ஹிந்தி "ஹிந்துஸ்தான்" ஆசிரியர் ஸ்ரீ முகுந்த பிஹாரிலால் ஆகியவர்கள் சென்ற மாதம் 29-ந் தேதி மாஜிஸ்டிரேட்டால் விடுவிக்கப்பட்டனர். இவர்களைத் தண்டிப்பதற்குப்போதுமான காரணங்களில்லை யென்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அனுமதித்த இயக்கத்துடன் இந்த கலவரங்கள் சம்பந்தப்பட்டவை என ருஜுபடுத்தச் சாக்ஷியம் எதுவும் விடப்படவில்லை யென்றும், கோர்ட்டார் கூறிவிட்டார்கள்.

* * * *

ஸர் பிரோஸ் கான் திட்டம்

அலிகார் சர்வகலாசாலையைச் சேர்ந்த மாணவர் சங்கக் கூட்டத்தில் இந்திய ஸர்க்கார் பாதுகாப்பு மெம்பர் ஸர் பிரோஸ் கான் நூன் பேசினார். இந்தியாவை ஐந்து ராஜ்யங்களாகப் பிரிக்க வேண்டுமென்றும். பாதுகாப்பு, சுங்கம், வெளிநாட்டு சம்பந்தம், செலாவணி இவற்றை நிர்வகிப்பதற்காகமத்திய ஸ்தாபனமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும், மேற்படி ஐந்து ராஜ்யங்களும் மேற்படி மத்திய ஸ்தாபனத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்றும் ஸர் பிரோஸ் கான் யோசனை கூறினார். மேற்படி ராஜயங்களுக்கு மேற்படி மத்திய ஸ்தாபனத்திலிருந்து விலகிக்கொள்ளவும், அப்பால் இஷ்டமிருந்தால் மறுபடியும் சேரவும் அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் அவர் எடுத்துரைத்தார்.

மேற்படி தமது யோசனையை விவரித்து ஸர் நூன் மேலும் பேசியதாவது:—

பிரிட்டிஷ் இந்தியாவைப் பின்வரும் ஐந்து ராஜ்யங்களாகப் பிரிக்கவேண்டுமென்பதே எனது விருப்பம்:- (1) வங்காளம், அஸ்ஸாம்; (2) மத்திய மாகணம். ஐக்கிய மாகாணம். பீஹார்; (3) சென்னை (திராவிட நாடு); (4) பம்பாய்; (மகாராஷ்டிரம்) (5) பஞ்சாப். பலூசிஸ்தானம், ஸிந்து வடமேற்கு எல்லைப்புறம். 15 லட்சம் பேர்களைக் கொண்ட

(14-ம் பக்கம் பார்க்க)

கென்ட் கோமகனின் அகால மரணம்

மாட்சிமை தங்கிய ஆரும் ஜார்ஜ் மன்னரின் இளைய சகோதரரான கென்ட் கோமகன் சென்ற மாதம் 25-ம்தேதி விமான விபத்தில் உயிர் இழந்தார். அன்று அவர் ஒரு பெரிய கடல் விமானத்தில் ஐஸ்லாந்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் வட ஸ்காட்லாந்துக் கருகில் விமான விபத்து நேரிட்டது. அந்த விமானத்தில் இருந்தவர்களுள் ஒருவர்தான் உயிர் தப்பினார் கோமகன் அனுபவம் வாய்ந்த விமானி. யுத்தம் ஆரம்பமான பிறகு இவர் உத்தியோக அலுவலாக பல்லாயிரக் கணக்கான மைல்கள் பறந்திருக்கிறார் இவர் கிரேக்க ராஜகுடும்பத்தைச் சேர்ந்த மரீனா ராஜ குமாரியை மணந்தார். படத்தில் இந்த தம்பதிகளைப் பார்க்கலாம். இவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருக்கின்றன.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா சட்ட சபையின் அவசரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் கூடப் போகிறது. பொது ஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளவே கூட்டப்படுகிறது. என்ன கவலை, பாருங்கள்! எவ்வளவு பொறுப்புடன் நிர்வாகம் நடக்கிறது! ஆனால், எப்படி நடந்து கொண்டால் என்ன? குறை கூறுவோருக்குக் குறைவு உண்டோ?

சட்ட சபையைக் கூட்டுவதையே எடுத்துக் கொள்ளுங்கள்! இதற்கும் கெட்ட எண்ணம் கற்பிப்பார்கள். உயிர் பிச்சை பெற்ற சபை என்பார்கள். உறவு இழந்த சபை என்பார்கள். உருக்குலைந்த சபை என்பார்கள். முடிவுக்கு மதிப்பில்லை என்பார்கள். சபையைக் கூட்டினாலும் குற்றம்; கூட்டாவிட்டாலும் குற்றம். என்ன தான் செய்வது?

யார் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்! கவர்ன்மெண்டார் தீர்மானித்து விட்டனர். கடமையை விடுவதற்கில்லை; விடப்போவதில்லை; இந்த நாட்டினர் குறை சொல்லலாம்; பிற நாட்டினர் குறை சொல்ல இடமிருக்கக் கூடாது. கவலையும் கடமையும் அதில் அடங்கியிருக்கின்றன. கவர்ன்மெண்டைக் கண்டிக்கச் சட்டசபைக்கு பலமில்லை. தாங்கி நிற்க இடம் உண்டு. பயன்படுத்திக் கொள்ள முற்பட்டு விட்டனர். விஷயம் அவ்வளவு தான்.

ஏய்க்கும் வித்தைக்கு எல்லை உண்டு. இன்று ஏய்ப்பது எளிதல்ல; உலகம் உஷாராகி விட்டது. நாட்டிலுள்ள நிலைமையைப் பிற நாட்டினர் அறிவர். சமாச்சாரத்தை வடிகட்டி வெளியிடலாம். வடிகட்டி வருவது எல்லாருக்கும் தெரியும். வெளியாகும் சமாச்சாரத்தை அப்படியே நம்பி விட மாட்டார்கள். உள் வயணத்தை அறிய ஆவல் இருக்கும்; அறிந்து கொள்ள எவ்வளவோ வழிகள் உண்டு.

உண்மையை மறைப்பதில் லாபமில்லை. உள்ள நிலைமையைப் பரிஹரிக்கவேண்டும். உள்ள நிலைமை என்ன? ஜனங்களின் நம்பிக்கை ஆடி விட்டது. கவர்ன்மெண்டின் முறைகள் நம்பிக்கையூட்டுவதாயில்லை. கலகத்தையோ குழப்பத்தையோ யாரும் வேண்டவில்லை. அடக்குவதில் நாட்டு மக்களுக்கு அதிக சிர்த்தை உண்டு. அடக்குவது மக்களின் நியாயமான அபிலாஷைகளை அடக்குவதாக முடியக்கூடாது. அந்த நிச்சயம் மக்களுக்கு இன்று இல்லை. அது ஏற்பட வேண்டும்; ஏற்படுத்த வழி காணவேண்டும்.

யுத்தத்திலே வெற்றிக்கு இடையூறில்லாமல் அதைச் செய்வது சாத்தியம்; செய்தால் யுத்த முயற்சிக்குக் பூர்ண வலுவு பிறக்கும். யுத்தமும் சீக்கிரத்தில் வெற்றிகரமாக முடியும். மனமொன்றுதான் துணிய வேண்டும். ஆட்சியாளும் புத்திப் பிரவிருத்தி மாறவேண்டும். வாசா கைங்கர்யம் இனி உதவாது. எதிர் காலத்தைப் பற்றிப் பசப்பு வார்த்தைகள் பயன் தரா. உண்மையில் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கும் எண்ணம் இருந்தால் வழி காண்பதில் சிரமம் இல்லை. அடிப்படையான பிரச்னை எழுந்து விட்டது; மழுப்ப முடியாது; தீர்க்க வேண்டும்.

சீவக சிந்தாமணி-11

தூது சென்ற கிளி

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

சீவகனுடைய உள்ளத்தே யானைக்குமுன் நடுங்கி வீழ்ந்த குணமாலையின் தோற்றமும் அவள் தன்னைப் பார்த்த பார்வையும் பதிந்துவிட்டன. மாளிகையில் தனியே இருந்த சீவகன், பலவகை வர்ணங்களைக் கிண்ணத்தில் கரைத்து வைத்துக் கொண்டு குணமாலையின் உருவத்தை சித்திரப் பலகையில் எழுதிக்கொண்டிருந்தான். துரத்தி வந்த யானைக்குமுன் குணமாலை அஞ்சி நின்ற நடுக்கத்தையும் அவள் தன்னை நோக்கிய காதல் நோக்கையும் சித்திரத்தில் வரைந்தான். யானையிடத்து அச்சத்தால் குணமாலை உடல் சோர்ந்து, தன் மார்பிலிருந்து நழுவி விழும் ஆடையையும் அறியாது நின்ற அங்நிலையையும் வரைந்து அதைத் திருத்தலாகாது என்று எண்ணி முத்து மாலையையும் எழுதி சித்திரத்தின் அழகைப் பார்த்து மகிழ்ந்தான்; குணமாலையின் உருவப் படத்தைக் கையிலெடுத்து மார்போடணைத்து கண்ணீர் ததும்ப அதையே நோக்கியிருந்தான்.

அந்தச் சமயத்தில், குணமாலையின் தூதாக வந்த கிளி, சீவகனைக் கண்டதும் துணுக்குற்றுச் சப்தம் கேட்காமல், பறந்து அங்கிருந்த தூணில் தங்கியது. சீவகன் கையிலுள்ள அழகிய உருவத்தைக் கண்டதும் அதிசயித்து மீண்டும் உற்று நோக்கியது. சித்திரத்தில் உள்ள உருவம் குணமாலையின் வடிவமேயென்று அறிந்தது. 'குணமாலையிடத்துக் காதல்கொண்டு அவள் உருவத்தை எழுதிக் கண்ணீர் விட்டு மனமுருகும் இவன் சீவகன் தான்' என்று நிச்சயித்து உவகை கொண்டது. உடனே குணமாலையின் காதலைச் சீவகனுக்கு உணர்த்த இது நல்ல தருணம் என்று எண்ணியது.

அப்போது, அதற்குத் தடையாகச் சீவகன் மனைவி காந்தருவதத்தை அங்கு வரலானாள். அவளைக் கண்ட கிளி, வருத்தமும் அச்சமும் அடைந்து, பக்கத்திலிருந்த சண்பகமரத்தில் பறந்து உட்கார்ந்து, 'இவள், தெய்வ மங்கையோ! திருமகளோ!' என்று அதிசயித்து உற்றுப் பார்த்திருந்தது.

விரகதாபத்தால் மனம் வெதும்பி, உடல் நடுங்க, சீவகனைக் காண்பதற்கு ஆவலுடன் வந்தாள் காந்தருவதத்தை. வந்தவள், பூக்கள் பரப்பிய படுக்கையில் சீவகன் அமர்ந்திருப்பதைக் கண்டு, பின்னர், அவன் கையில் இருந்த படத்தை உற்றுப் பார்த்து துணுக்குற்றாள்.

"வீர! இந்த உருவம் யாருடையது? தாங்கள் வரைந்த வடிவமோ?" என்று உதடு துடிக்கக் கேட்டாள். அவள் கேட்கும் போது அவளுடைய மார்பு வெடித்து விடும் போல் பொருமியது.

படத்திலே உள்ளத்தையும் பார்வையையும் ஒருங்கே பதிய வைத்திருந்த சீவகன், காந்தருவதத்தையின் பேச்சைக் கேட்டதும் மனங் கலங்கித் திடுக்கிட்டு பார்த்தான். உள்ளே புன்னகை செய்து, "நங்காய்! இது ஓர் இயக்கியின் வடிவம்" என்று மறுமொழி சொன்னான்.

குணமாலையைப் பல முறை பார்த்தவளாதலால் சீவகன் எழுதிய வடிவம் குணமாலையினுடையது என்பதைக் காந்தருவதத்தை நன்கு உணர்ந்தாள்.

"கூந்தலும் ஆடையும் நழுவ நின்ற இந்தப் புதிய இயக்கி, குணமாலை யென்பது எனக்குத் தெரியும். நும் மனத்தை இயக்கிய இவள் இயக்கிதான். நீங்கள் பொய் கூறவில்லை. உண்மையே தான் சொன்னீர்" என்று கடுத்த முகத்துடன் மொழிந்தாள் காந்தருவதத்தை. சந்திர மண்டலத்தே முத்துக்கள் தோன்றியது போல், அவள் முகத்தே வியர்வை துளித்தன. புருவங்கள் வில்லைப் போல் வளைந்து நிற்க, கண்களில் நீர் ததும்பி மார்பில் வீழ்ந்து சிதறப் பெரு மூச்சு விட்டு நின்றாள் அவள்.

காந்தருவதத்தை ஊடல் கொண்டதைக் கண்ட சீவகன் எழுந்து நின்று புன்முறுவலுடன், "நங்காய்! நம் இருவருக்கும் உடம்பு இரண்டல்லது. உன் உயிரே எனக்கு உயிராயுள்ளது. இதை நீ அறிந்தவள். கங்கை நீரை விரும்பிய அன்னப் பறவை மணலூற்று நீரை விரும்பாது. ஆதலால் நீ ஊடலை விட்டுவிடு" என்று ஆறுதல் கூறினான்.

தன்னை யல்லாது பிற மங்கையின் பெயரைக் கூறக் கேட்டாலும் மனம் சகியாத காந்தருவதத்தை, சீவகன் கூறிய மொழியால் மிக்க கோபம் கொண்டாள். குணமாலையின் சித்திரப் படத்தை உற்று நோக்கித், தனக்கு எதிரான அழகையும் பருவத்தையும் குணமாலையிடத்துக் கண்டமையால், சீவகனிடம் அடங்காத ஊடல் கொண்டாள். உடனே தன் உடலில் அணிந்திருந்த ஆபரணங்களையும், பூ மாலைகளையும் எடுத்துச் சிதற எறிந்து கோபத்துடன் அந்தப்புரம் சென்று விட்டாள்.

காந்தருவதத்தை ஊடல் கொண்டு சென்று விட்டதைக் கண்ட கிளி, மகிழ்ந்து, சண்பக மரத்தை விட்டுப் பறந்து சீவகன் பாதத்தில் வந்து தங்கி, "நின் பாதம் வாழ்க" என்று பேசியது. கிளியின் வரவையும் அதன் பேச்சையும் கண்டு கேட்ட சீவகன், அதிசயத்துத் தன் கையை நீட்டினான். கிளி பறந்து அவன் கையில் அமர்ந்தது.

"கிளியே! நீ எங்கு வந்தாய்", என்று சீவகன் அன்புடன் கேட்டான். "குமர! யானையை யடக்கிய வீரனைக் கண்டு அவன் காதலை அறிந்து வா என்று குணமாலை கூறிய வார்த்தையுடன் வந்தேன்" என்று கிளி கூறியது.

"கிளியே! யானை யுண்ட விளங்கனி போல் என் உடலில் ஒன்றுமில்லாமல், என் உள்ளத்தையும் ஆண்மையையும் ஒரு பார்வையாலே கவர்ந்து கொண்ட கள்வி, அன்று நடுங்கி நின்றாள்; அவள் நிலை எவ்விதம் உள்ளது?" என்று சீவகன் கேட்டான்.

"கன்னி மாடத்தே பூம்படுக்கையில் படுத்து உணவும் உறக்கமும் இல்லாமல், உன்னை நினைந்து புலம்புகிறாள். கன்னியர் தம் காமத்தைப்பிறரிடம் சொல்லாராதலின் யான் கேட்டாலும் விளங்கச் சொல்லாள். யான் மக்கள் சாதி அல்லாமையால் அவள் வருத்தத்தை அளவிட்டு உரைக்கவும் அறியேன்" என்று கிளி கூறியது.

குணமாலையின் காதலை மழலைச் சொற்களால் கிளி மொழிந்ததைக் கேட்டுச் சீவகன் மகிழ்ச்சி கொண்டான்.

"கிளியே! குணமாலையின் வார்த்தையாகிய மருந்தை யான் பிழைக்கும்படித் தந்த நீ வீரும்பியதைக் கேள்" என்று சீவகன் கேட்டான்.

"வீர, உன்னைப் போல் குணமாலையும் வருந்துகிறாள். அவளுக்கு உன் தோளே இனிய மருந்து யான் பரிசாக விரும்புவது இவை தான்" என்று திருத்தமாகப் பேசியது கிளி.

"கிளியே! குணமாலையின் உறவினர் மிக்க பொருளையும் ஊரையும் சீதனமாகத் தர வேண்டுமென்று விரும்பினாலும் அவற்றைக் கொடுத்து அவளை யான் சேர்ந்து மகிழ்விப்பேன். இவ்வார்த்தை தவறாது. நீ சென்று இதனைச் சொல்" என்று சீவகன் சொல்லினான்.

"குமர! குணமாலையின் வருத்தம் நீங்கும்படி உன் வார்த்தையை மட்டும் யான் சென்று கூறுதல் முடியாது. அதனால் அவள் வருத்தமும் நீங்காள். உன் காதல் உண்மை யென்று அவள் உணரும்படி நீ எழுதிய திருமுகத்தையும் (கடிதம்) உன் மோதிரத்தையும் கொடுக்க வேண்டும்" என்று கிளி கேட்டது. கிளியின் பேச்சுத் திறமையைக் கேட்ட சீவகன் அதைக் கொண்டாடி, பிறரறியாமல், தான் எழுதிய திருமுகத்தைத் தினைக்கதிரில் வைத்து, அதையும் தன் பெயர் எழுதிய மோதிரத்தையும் கொடுத்துக் கிளியை அனுப்பினான். கிளி அவற்றைப் பெற்றுக் கொண்டு குணமாலையின் மாளிகை நோக்கி பறந்து சென்றது.

பின்னர் சீவகன், அந்தப்புரம் சென்றான். அங்கே போர்வையால் போர்த்திக் கொண்டு கோபத்துடன் படுத்திருந்த காந்தருவதத்தையை வணங்கி இனிய சொற்களால் அவள் ஊடலை நீக்கினான். காந்தருவதத்தை கோபம் நீங்கிச் சீவகனுடன் மகிழ்ந்திருந்தாள்.

* * * * *

கன்னிமாடத்தே கிளியின் வரவை எதிர் நோக்கி வருந்தியிருந்தாள் குணமாலை.

"கிளி என் காதலனைக் கண்டதோ! காணாமல் வருந்துகின்றதோ! காதலனைக் கண்டு என் நிலையைச் சொல்லியதோ! என் நிலையை அவர் உணரும்படிக் கூறிற்றோ! கிளிக்கு என் காதலர் இனிய வார்த்தையைக் கூறினாராயின் அது கிளிக்கு உபசாரமன்று; என் உயிரைக் கொடுத்தாரென்றே கூறுவேன். கிளியோடு பேசாது போனால் யானும் சுரமஞ்சரியைப் போல் தவம் செய்தாயினும் அவரை அடைவேன். ஆ, நான் இறந்து போவேனோ! கிளி பேதையாயிற்றே! அது வருவதற்குள் நன்மை தீமையைக் கூடலிழைத்து அறிகிறேன்" என்று பிதற்றிய குணமாலை, முத்துக்களை வைத்து வட்டத்தை இழைத்தாள். 'இது தீமையை உணர்த்தினால் கிளி வருவதற்குள் உயிர் நீங்குமே!" என்ற எண்ணம் உண்டாகிக் கூடலிழைத்தலைக் கை விட்டுக் கிளியின் வரவை எதிர்பார்த்திருந்தாள் குணமாலை.

அப்போது, கிளி, குணமாலையின் முன் பறந்து வந்து உட்கார்ந்தது. கிளி என்ன சொல்லுகிறதோ என்று கவலையுடன் அதை உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் குணமாலை. கிளி, முதலில் தான் கொணர்ந்த மோதிரத்தைக் கொடுத்தது. குணமாலை ஆவலுடன் அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கையில் மறைத்து வைத்துக்கொண்டாள். பின்னர் திருமுகமிருந்த தினைக் கதிரைக் கொடுத்தது கிளி. தினைக்கதிரை வாங்கி கூந்தலில் சூடி அடங்கா மகிழ்ச்சியோடு கிளியைத் தன் வயிற்றில் இறுக அணைத்துக் கொஞ்சினாள். கிளி, சீவகன் மொழிந்தவற்றையும், அவன் எழுதிய சித்திரப் படத்தைப்பற்றியும் கூறியது. பின்னர், குணமாலை, கிளியை உயர்ந்த ஆசனத்தில் இருத்திச்சீவகன் அனுப்பிய மோதிரத்தை அணிந்துகொண்டு கிளிக்குப் பாலன்னத்தை ஊட்டிக் கூட்டில் உறங்கச் செய்தாள்.

பிறகு, சீவகன் எழுதிய திருமுகத்தைத் தினைக்கதிரிலிருந்து எடுத்து, வாசித்தாள்.

"சீவகன் ஓலைபைக் குணமாலை காண்க; கிளியின் வரவால் யான்வருத்தம்நீங்கினேன். நீயும் வருத்தம் நீங்குவாயாக.

(12-ம் பக்கம் பார்க்க)

பண்டைக்காலப் போர் முறை

மாடு பிடித்தல்

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

இரண்டு நாடுகள் ஒன்றற்கொன்று போர் புரிந்து வரும் காலத்தில் அவற்றின் எல்லைப்புறத்தே அமைந்திருக்கும் பிரதேசத்துக்குத்தான் அதிக கஷ்டமாகும். பொதுவாகவே நாட்டின் அமைதி எல்லைப்புறத்தையே பொறுத்ததாக இருந்து வந்தது. அதனால் பண்டை மன்னர்கள் தங்கள் நாடுகளின் எல்லைப்புறங்களை நன்ருகப் பாதுகாத்து வந்தனர்.

"உன் நாட்டு எல்லைக்குப் பக்கத்தேயுள்ள எதிரிக்கோட்டையின் அதிகாரியை எளிதில் முறியடித்துவிடக் கூடுமாயின் அவ்விதம் செய்வதே மேலானது. அது கடினமானதாக இருக்கும் என்று தோன்றினல் அவனுடன் கலந்து உறவாடி அவனை நண்பனுக ஆக்கிக் கொள். தவிர, உன்னுடைய கோட்டையதிகாரியே உனக்கு விரோதியாக இருப்பானுகில், எதிரிக் கோட்டை அதிகாரியைக் கைவசப்படுத்துவதால் பயன் என்ன? அதனல் அவனுக்காகவாவது கோட்டையையும் காத்து வர வேண்டும்." என்று கிருஷ்ணதேவராயர் தாம் எழுதியுள்ள 'ஆமுக்த மால்யதா' என்னும் நூலில் சொல்லியிருக்கிருர்.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் எல்லைப்புறத்தே சிறு அரசாங்கங்கள் சில உண்டு. அவ்விதம் இல்லாமல் பக்கத்தே பேர் அரசாங்கம் ஒன்று ஏற்பட்டுவிட்டாலும், அவர்கள் எல்லைப்புறத்தே உள்ள பகுதிகளைச் சிறறரசாங்கங்களாகப் பிரித்து விடுவர்.

அநேகமாக நாடுகளின் எல்லைகள் காடுமலைபோன்ற இயற்கை அரண்களாகவே இருக்கும். அந்த இடங்களில் வசித்துவரும் மக்களை பண்டை மன்னர்கள் மிக்க அன்புடன் பரிபாலித்து வந்தனர். அவர்களுடன் பழகும்போது மற்றக் குடி மக்களை நடத்துவதுபோலப் பாவிக்க முடியாது. காடுமலைகளில் வசிப்பவர்கள் இதரபாகங்களில் வசிப்பவர்களைப்போல நாகரீகம் வாய்ந்தவர் அல்லர். அவர்களுக்கு உள்ளொன்றுவைத்து புறம்பொன்று பேசத்தெரியாது. எனினும் அவாகள் பிறரை எளிதில் நம்பிவிட மாட்டார்கள்.

கிருஷ்ணதேவர் கூறியது

"எந்த தேசத்திலாவது காட்டு மக்கள் அதிகமாகப் பெருகிவிட்டார்களாயினும், அந்நாட்டு மன்னனுக்கு அவர்களால் ஏற்படும் தொலைகள் கொஞ்சமானதாக இரா. அதனல் மன்னன் அவர்கள் பயத்தைப் போக்கி அவர்களைத் தனக்கு வேண்டியவர்களாகச் செய்து கொள்ளவேண்டும். அவர்கள் அதிக முன்னேற்றம் அடையாதவர்களானபடியால் நம்பிக்கையோ அவ நம்பிக்கையோ, கோபதாபமோ, நேசப்பான்மையோ கொடும் விரோதமோ ஓர் அற்ப விஷயத்தில் எற்பட்டுவிடும்... நேர்மையான நடத்தையும் உண்மையும் எப்படிப்பட்ட மிருகத் தன்மை வாய்ந்தவர்களையும் அடிப்படுத்திவிடும்."

கிருஷ்ண தேவராயரும் தாம் கூறியவாறே நடந்திருக்கிருர். குறும்பர் முதலிய மலை நாட்டினரைப் பட்சமாகவே ஆதரித்து வந்திருக்கிருர். அந்த முன்னர் திக்கு விஜயம் செய்யக் கிளம்பிய காலத்தில் பதினெட்டுக் கம்பணங்களின் போயத் தலைவர்களையும் வரவழைத்து அவர்களுக்குப் பெரிய விருந்து ஒன்று நடத்திவைத்தார் என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் காடுமலைகளில் வாழ்ந்து வந்த மக்களையே பண்டை மன்னர்கள் போருக்குச் செல்லும் முன்னணிப் படையாக உபயோகித்திருக்கிருர்கள். அவர்கள் எதிரி நாட்டுள் புகுந்து கொள்ளையிட்டு ஆடுமாடு முதலியவற்றைச் சிறைப் பிடித்து வருவர்.

பொதுவாக இந்த உத்தரவை அரசனே நேரில் கொடுப்பது வழக்கம். யாருக்கும் அடங்காமல் சுயேச்சையாகத் திரியும் அவர்கள் அரசாங்கத்து அதிகாரிகள் இடும் உத்தரவுகளை அதிகமாக மதிக்காமலும் இருந்திருக்கலாம். அல்லது அவ்வித அதிகாரிகள் நாகரீகமடையாத மக்களுடைய தன்மையை அறிந்துகொள்ளாமல் ஏதாவது சொல்லி 'விபரீதத்தை விளைவித்து விடுவாரோ' என்ற சம்சயமாகவும் இருக்கலாம்.

ஆடு மாடு கொள்ளை

இவ்விதம் காட்டு மக்களைக் கொண்டு எதிரிகளுடைய பிரதேசத்தில் கொள்ளையிட்டு ஆடு மாடுகளைக் கவருவது நாட்டின் குடி மக்களிடையே பீதியை உண்டுபண்ணுவதற்காகவே நிகழ்வது. இது நம் நாட்டில் மிகப் பழங் காலத்திலிருந்தே நடந்து வருவது மஹாபாரதத்தில் விராட பர்வக் கதையை யாவரும் அறிவர். பண்டைத் தமிழ் நூற்களிலும் 'நிரை கோடல்' என்னும் இந்தத் துறையில் பாடப்பட்ட செய்யுள்கள் பல இருக்கின்றன.

முன்னளிலே நம் மக்களுக்கு ஆடு மாடுகளே பெரிய சொத்தாக இருந்து வந்தன. அதுவும் நாட்டுப்புறங்களிலே உழுதுண்டு பயிர் செய்வோருக்கு அவை மிகவும் அவசியமானவை. அவற்றைத் தவிர அவர்களிடம் வேறு. விலையுயர்ந்த சொத்துக்களை நாம் எதிர்பார்க்க முடியாது. அந்த ஆடு மாடுகள் போய்விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்?

நாட்டு மக்கள் இவ்விதம் தங்கள் அருந்தனத்தை இழப்பது அவர்களிடையே பெரிதும் மனக்கலக்கத்தை உண்டு பண்ணும். பக்கத்துக் கிராமங்களில் இருப்பவர்கள் தங்கள் சொத்துக்களைப் பறி கொடுக்காமல் இருக்க, அவற்றைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டு செல்வர். இதனல் குடிகளிடத்தே அமைதியின்மையையும் பரபரப்பும் ஏற்படும். படையெடுத்து வருபவர்கள் அதிகமான எதிர்ப்பில்லாமல் சுலபமாக நாட்டைக் கைக்கொள்ளலாம்.

புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் தமிழ் நூல்களிலே இது நன்ருக வருணிக்கப்பட்டுள்ளது. மாட்டு மந்தைகளைக் கைப்பற்றிச் செல்லுவோர் வெட்சிப் பூ மாலை அணிந்து குதிரையேறி வில்லும் அம்பும் ஏந்திச் செல்வர். அவர்கள் எதிரி நாட்டுள் புகுந்து போர் புரிந்து மாடுகளை மடக்கி ஓட்டி செல்வர். மாட்டின் சொந்தக்காரர்கள் இந்தச் செய்தியைத் தங்கள் அரசனுக்கு அறிவித்து அவற்றை மீட்டுக் கொடுக்கும்படி வேண்டுவர். மந்தைகளை மீட்கக் கிளம்புவோர் கரந்தைப் பூமாலையை அணிந்து ஓடோடியும் வருவர். பெரிதும் அவர்கள் வெற்றி கிட்டாமலேயே திரும்புவர். நிரை கொண்ட வெட்சிப் பூமாலையார் தங்கள் நாட்டை அடைந்து அந்த மாடுகளைப்பங்கிட்டுக் கொள்வர். அப்பால் அவர்கள் ஒரு விருந்து வைத்து வள்ளிகாத்தாடி தங்கள் புகழைக் கொண்டாடுவார்கள்.

பல நிகழ்ச்சிகள்

சரித்திர காலத்திலும் இந் நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்ந்திருக்கின்றன. கி. பி. ஏழாம் நூற்ருண்டுவரையில் தென்னட்டில் கிடைக்கும் கல்வெட்டுகளுள் ஒரு பகுதி இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. நீடு நாடு என்று வழங்கப்படும் வடவார்க்காடு சேலம் மைசூர் ஸமஸ்தானத்தின் கீழ்ப் பகுதி ஆகிய இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளால் பெரும்பாலான இவ்வகுப்பைச் சேர்ந்தவை.

அவை மாடு பிடி சண்டையில் வீழ்ந்து இறந்து போன வீரன் ஒருவனுடைய புகழைக் கூறி அவனுக்கு எழுப்பிய நடுகல்லைப் பற்றிச் சொல்லும்.

போரில் இறந்த வீரனுக்கு நடுகல் எழுப்புவது பண்டை நாள் வழக்கம். அதை வீரவணக்கம் என்று கூறலாம். இப்பொழுது ஞாபகார்த்தச் சின்னங்கள் எழும்புவதைப் போன்றது. இதை வீரக்கல் என்றும் சொல்வர். பல சமயங்களில் அந்தக் கல்லில் இறந்துபோன வீரனுடைய உருவமும் காணப்படும். அவனுடைய உருவம் மட்டுமோ போரில் அம்பாலோ கத்தியாலோ குத்துண்டு கீழே சாயும் நிலையில் அவனுடைய உருவமே செதுக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில் அவற்றுடன் தேவமாதர் அவ்வீரனை சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் காட்சியும் சித்தரிக்கப்பட்டிருக்கும், அவன் புகழைக் காணும் கல்வெட்டும் அடியிலோ பக்கத்திலோ கல்லின் பின்புறத்திலோ பொறிக்கப் பட்டிருக்கும்.

பழைய இலக்கண ஆசிரியர் தொல்காப்பியர் இவ்வழக்கத்தை "காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுகல், சீர்த்த மரபிற் பெரும் படை வாழ்த்தல்" என ஆறு பிரிவுகளாக வகுத்துக் கூறுகிருர்.

அதாவது அவ்விதம் எழுப்புவதற்குத் தக்க கல்லைப் பொறுக்கி எடுத்தல், அக்கல்லில் சித்திரத்தையும் எழுத்துக்களையும் பொறிப்பதற்கு ஏற்ற முகூர்த்தம், அதனைப் புனித நீராட்டி அதை ஏற்ற இடத்தில் அமைத்தல். அப்பால் அதனைத் தெய்வமாக வழி படுதல் என்பனவாம்.

இத்தகைய நடுகல்களை வழிபடுவதற்குப் பழைய காலத்து மன்னர்கள், இறந்த வீரனுடைய உற்ருர் உறவினர், சேனைத் தலைவர்கள் முதலியோர் நிலங்தங்களை அளித்து வந்திருக்கின்றனர். அதனைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்களும் உள.

"பெரிய பாக்கியம்"

முன்னளிலே போர் வீரர்கள் யுத்தத்தில் மார்பில் தாக்குண்டு இறந்து போவதைப் பெரிய பாக்கியமாகவே கருதி வந்தார்கள். அப்படி இறக்காமல் அடி மட்டும் பெற்று உயிர்வாழும் வீரர்கள் தாங்கள் அந்த அடியினின்றும் பிழைத்து எழுந்திருக்காமல் இறந்துபோவதையே விரும்புவார்கள். அதனல் அவர்கள அந்தக்காயங்களுக்கு வேண்டிய சிகிச்சை செய்யாமல் அப்படியே விட்டுவிடுவார்கள். நல்ல வாலிபப்பருவம் உள்ள வீரர்கள் சிலருக்கு அந்தக்காயம் தானகவே ஆறிவிடும். அதைக் கண்டால் அவர்கள் அந்தக் காயம் சொஸ்தமாகாதவாறு அதைக் கிளறி விட்டுவிடுவார்கள். போர்க்களத்திலே இறக்காவிட்டாலும் போர் முனையில் பட்ட காயத்தால் இறந்தாலும் வீரசொர்க்கம் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணமாக இருக்கலாம். அன்றி, போர்க்களத்தில் படும் அடி பெரும்பாலும் ஒருவனுடைய உயிர் நிலையைத் தாக்கிச் சக்தியைப் போக்கடித்து அவனைப் பின் வாழ்நாள் முழுதும் உடல் வலியில்லா முடமாக்கி விடுமாதலால், அத்தகைய வாழ்க்கை

(12-ம் பக்கம் பார்க்க)

கண்ணன் பிறந்தான்

"தமிழன்" எழுதியது

கண்ணன் பிறந்தான்! எங்கே? எப்போது?

பல்லாண்டுகளுக்கு முன்பு வட மதுரை என்னும் ஊரிலே, வஸுதேவரையும் தேவகியையும் சிறைப்படுத்தி வைத்திருந்த அரண்மனையிலே கண்ணன் பிறந்தான். பிறந்ததும், அவனை அவனுடைய தகப்பனர் வெளியே எடுத்துச் சென்று யமுனை நதிக்கு அக்கரையிலே இருந்த இடைச்சேரியிலே கொண்டு போய் விட்டார். அதனல் நந்தன் என்னும் இடையனுக்கு அவனுடைய மனைவி யசோதை என்பவளின் பிள்ளையாகக் கண்ணன் பிறந்தான்.

கண்ணன் பிறந்த நாள் இடைச்சேரியிலே பெரிய திருநாள். இடையர்களுக்குத் தலைவனுன நந்தகோபனுக்குப் பிள்ளை பிறந்திருக்கிருன் என்ற செய்தி இடைச்சேரி முழுவதிலும் பரவிற்று; இடையர்கள் அங்கு மிங்கும் ஓடினுர்கள; ஓடும் அவசரத்தில் ஒருவர்மேல் ஒருவர் விழுந்தார்கள்; சந்தோஷச் செய்தியைக் கேட்ட குதூகலத்திலே ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள். "நமக்குப் பிரானுகப் பிறந்தவன் எங்கே?" என்று அவனைக் காணுவதற்காக நந்தகோபனுடைய வீட்டிற்கு விரைந்து வந்தார்கள். இடைச்சேரி முழுவதும ஒரே கொண்டாட்டம். பாடத் தெரிந்தவர்கள் பாடினுர்கள்; மேள வாத்தியங்கள் முழங்கின. பாட்டுக்கும் மேளத்திற்கும் ஏற்றவாறு ஆடத்தெரிந்தவர்கள் ஆடினுர்கள்.

நந்தகோபனுடைய வீட்டிலே குழந்தையைக் கண்டுகளித்துச் சிலர் வெளியே வந்தார்கள்; காணப் போவார்கள் அவர்களைச் சந்தித்து குழந்தையைப் பற்றி விசாரித்தார்கள். அவர்களோ, "ஆண் பிள்ளைகளுள் இவனுக்கு ஒப்பாவார் இல்லை? இவன் திருவோணத்தானுக வேண்டும். இவன் உலகை எல்லாம் ஆளப் பிறந்தவன்" என்ருர்கள். இடைச்சேரியிலே ஒவ்வொரு வீட்டிலும் கொம்மாளந்தான், நெய். பால், தயிர் இவற்றை ஒருவர் மேல் ஒருவர் வாரி இறைத்தார்கள்; உரியை முற்றத்திலே உருட்டி விட்டார்கள்; இடைச்சிகள் கூந்தல் முடியவிழ்ந்ததையும் கவனியாமல் அறிவிழந்து கூத்தாடினுர்கள். அவ்வளவு ஆனந்தம் அவர்களுக்கு! கண்ணன் பிறந்தான் அல்லவா?

இடையர்கள் நெய் தேய்த்துக் கொண்டு மங்கள ஸ்நானம் செய்தார்கள். சாதாரணமாக தினந்தோறும் ஸ்நானம் செய்யும் வழக்கமில்லாதவர்கள்; தலைகுளித்தால் உடம்பு குளிக்க மாட்டார்கள். அவர்கள் கண்ணன் பிறந்ததை ஒரு திருவிழாவாகக் கொண்டாடினுர்கள். யசோதை குழந்தையைக் குளிப்பாட்டினுள். கையையும் காலையும் மெள்ள நிமிர்த்து கடாரத்திலே வைத்திருந்த வெந்நீரை, கையால் அள்ளி குழந்தைமேல்விட்டாள். பசு மஞ்சளை அரைத்து குழந்தையின் நாக்கிலே தடவினுள்; தடவும்போது குழந்தை வாயைத் திறந்தான்; திறந்தவாயுள் யசோதை ஏழு லோகங்களையும் கண்டாள்: அருகிலிருந்த சேடியரும் அவ்வதிசயத்தைக் கண்டார்கள். அவர்கள் "இடைப் பிள்ளையல்லன் இவன்? தெய்வப் பிறப்பு. இவனுடைய அழகையும் செய்கையையும் பார்த்தால் இவன் மாயனே என்று நிச்சயிக்கலாம்" என்று எல்லோரிடமும் சொல்லி மகிழ்ந்தார்கள்.

பிறந்தநாளைப் பத்து நாள் கொண்டாடினுர்கள்; பதினேராவது நாள். குழந்தையைத் தொட்டிலிலிட்டாகள் இடைச்சேரிப் பெண்கள் அனைவரும் அந்த ஆனந்தக் காட்சியைக்காண வந்திருந்தனர்; அவர்களுள் ஒருத்தி, குழந்தையைத் தொட்டிலிலிருந்து வாரி யெடுத்து இடுப்பிலே அணைத்துக்கொண்டாள். இடுப்பிலே வைத்துக்கொள்ள முடியவில்லை. அவ்வளவு கனமாயிருந்தான் குழந்தை. தொட்டிலிலே மெள்ளக் கிடத்தி விட்டாள். குழந்தை காலாலே தொட்டிலை உதைத்தான். தொட்டில் சிதைந்துவிடும் போலிருந்தது. மறுபடியும் ஒக்கலிலே எடுத்துக் கொண்டாள். குழந்தை காலால் அவளுடைய வயிற்றிலே ஒரு உதை கொடுத்தான். 'இது என்னடி பிறந்து பத்து நாள் ஆகவில்லை, இந்தக் குழந்தைக்கு இத்துணை மிடுக்கு' என்று அவள் ஆச்சரியப்பட்டாள்.

இவ்வாறு கண்ணன் பிறந்ததை வருணிக்கிருர் பெரியாழ்வார். அவர் என்ன கண்ணன் பிறந்ததை நேரிலே கண்டாரா? ஆமாம்; பக்தர்கள் பகவானை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். விஷ்ணுவை எப்பொழுதும் சித்தத்திலே வைத்துக் கொண்டாடியதனலே பெரியாழ்வாருக்கு விஷ்ணு சித்தர் என்ற பெயர் வந்தது. அவருக்கு ஒரு தோழன் இருந்தான். அவன் பெயர் அபிமானதுங்கன் செல்வன்; அவன் ஊர் திருக்கோஷ்டியூர் அங்கே அவன் கண்ணனுக்கு ஒரு திருக்கோயில் அமைத்தான். அந்தக் கோயிலையே கோகுலமாகக் கொண்டு அங்கேயும் கண்ணன் பிறந்தான். விஷ்ணுசித்தர் முதலானவர்கள் தங்களை இடைச்சிகளாகவும் இடையர்களாகவும் பாவித்துக் கொண்டார்கள். கோயிலில் கும்பாபிஷேகஞ் செய்த நாளே அங்கே கண்ணன் பிறந்த நாள். அன்று திருவோணம் என்பதால் திருவோணத்திருவிழாவையும் அன்றே கொண்டாடினுர்கள் பிறந்த குழந்தை பல்லாண்டு வாழவேண்டுமென்று எல்லோரும் வாழ்த்தினுர்கள். வாழ்த்து முடிவுரையாக,

"அல்வழக்கொன்றுமில்லா
அணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்
செல்வனைப்போல, திருமாலே
நானும் உனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணுவென்று
நாமம் பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே
உன்னைப்பல்லாண்டு கூறுவனே"

என்று பெரியாழ்வார் பாடி முடித்தார். முன்பு வடமதுரையிலும் கோகுலத்திலும் பின்பு திருக்கோஷ்டியூரிலும் பிறந்த கண்ணன் ஆண்டு தோறும் வீடு தோறும் பிறக்கிருன். அவன் பிறப்பதை நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்; தெருவாசலைப் பெருக்கிச் சுத்தமாக்கி, சங்கு, வில், வாள், தண்டு முதலிய கோலங்களைப் போட்டு வைக்கிறோம். மாக்கோலத்தால் கண்ணன் காலடிகளை நம்முடைய வீட்டிற்குள் வருவனவாக அமைக்கிறோம். குழந்தைக்காக சீடை முதலிய பக்ஷணங்களைச் செய்து வைக்கிறோம். சற்று நேரமானதும் கண்ணன் பிறந்தான் என்று பரமானந்தமடைகிறோம். கண்ணிற்காணும் குழந்தைகள் எல்லாம் கண்ணனே என்கிறோம், கண்ணன் தேவகியின் மகன் மட்டுமல்லன்; யசோதைக்கு மட்டும் மகன் அல்லன் நம் எல்லோருக்கும் தனித்தனியாகப் பிறந்த பிள்ளை என்று இன்புறுகிறோம். ஆம்; நம் எல்லோரும் கண்ணனைப்பெற்ற தாயார்; அந்த அருந் தெய்வம் எல்லோருக்கும் பிள்ளை. இது முற்றும் உண்மை.


இப்பிரசித்தி பெற்ற மெழுகு தழும்பின்றி குணப்படுத்தும்.
ஒவ்வொரு வீட்டிலும் ஜாம்-பெக் இருக்கவேண்டும்.
எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் வீட்டில் விபத்துகள் ஏற்படும். குழந்தைகள் முழங்காலில காயம், சிராய்ப்பு, தீப்புண் மூலம் ஓயாமல் தொந்திர வளித்துவரும். இவை கடும் வியாதியாக மாறலாம். இதனல்தான் ஜாம்-பெக் உடனே தடவவேண்டும். ஜாம்-பெக்கிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை சத்துக்கள் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்தைக் குறைத்து, சீழ் வடிதலை நிறுத்தி விடும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.
எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK
மிருகக் கொழுப்பற்றது.

நாடகம்

அந்தகக் கவி

கணபதி அப்பன்

எழுதியது

முதல் காட்சி

இடம்-கவிஞரின் இல்லம்

[பலமாதர் கூடி கவியின் மனைவியுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்.]

ஒருத்தி:—என்ன இருந்தாலும் வாழ்க்கையில் எனக்கு இருக்கிற கசப்பு யாருக்கும் இராது. பொறந்த இடத்திலாவது புகுந்த இடத்திலாவது நெரயப் பொருளிருக்கணும், இல்லாதபோனு புருஷன் நம்மபேச்சைக் கேக்கிறுங்கற பெருமையாவது இருக்கணும்.

கவியின் மனைவி;—வீட்டுக்கு வீடு வாசப்படிதான். நான்தான் என்ன சுகத்தில் இருக்கேன்? பெரியவா தேடி வச்சதைக்கொண்டு சட்டமாச் சாப்பிடறோம். உங்களுக்கெல்லாந் தெரியாதா என்ன? செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கித் தின்னக்காணுமோ?

ஒருத்தி:—உம். எண்ணெய்க்குடம் போட்டவளும் அப்பாட அப்பாடே, தண்ணிக்குடம் போட்டவளும் அப்பாட அபபாடே! உனக் கென்னடியம்மா! பொருள் கொறையா அல்லது புருஷன் கொஞ்சம் மட்டா? ஓங்க வீட்டுக்காரர் பிறவியில்தான், என்னமோ, குருடராப் போனுரேயொழிய அவருக்கிருக்கிற புத்தியும் படிப்பும் யாருக்கு வரும்? பெரிய பெரிய புராணங்களை யெல்லா தன் முதுகிலேயே விரலால் எழுதச் சொல்லிக்கற்றும் விட்டாராமே. அவர் படிப்பின் பெருமையைப் பற்றிப்பேசாதவரில்லையே

மனைவி;—ஆமாம்! கல்வி கற்றதினுல், வளநாடும் இளங்கன்றுந்தான் பெற்றுவிட்டார். அட போ.

ஒருத்தி:—(கவிஞர் அவ்வழியே போவதைப்பார்த்தவளாய்த் தாழ்ந்த குரலில்) அடியே! அதோ வீட்டுக்குள் போரார். இது அவர் காதில் விழுந்தால் என்ன நினைக்கமாட்டார்.

மனைவி:—என்னடியம்மா, வேடிக்கையாய்ச் சொன்னேன். வேறென்ன?

ஒருத்தி:—உம்-வேடிக்கையா நீ உலகமறியாதவள்—பிறகு எப்படித்தான் புருஷன் பெண் ஜாதிக்குள் மனஸ்தாபம் வருகிறதென்கிருய்? இப்படி ஒண்ணுமில்லாத விஷயத்தில் தான்! எதுக்கும் பெண்ணுகப்பிறந்தவ நாக்கை அடக்கிப் பேசறது ரொம்ப நல்லது, நமக்கு எத்தனையோ மனக்கஷ்டமிருக்கும். அதை, பகலில் பக்கம் பாத்துப் பேசு, ராத்திரி அதுவும் பேசாதே' என்ற பழமொழியை மறந்து பேசலாமோ—நீ சொன்னது அவர் காதில் விழுந்திருக்குமென்றுதான் நினைக்கிறேன்.

இரண்டாம் காட்சி

இடம்:—கவியின் அறை

(கவி தனியே இருந்து யோசிக்கிறர்)

கவி:—(பெருமூச்செறிந்து) ஆம்—இல்லாளை இல்லாளும் வேண்டாள்—என்ன சொன்னுள்—வளநாடும் இளங்கன்றும்—ஊம்-இருப்பது வயிற்றுக்குப் போதுமென்றிருப்பதாலன்றோ இத்தீச்சொல்—"ஆசைக்கோரளவில்லை யென்று மேலும் மேலும் பொருளீட்டலிலேயே கிடந்து புறழ்வதன்றோ இப்பாசபந்தத்தின் போக்கு—ஆம், பிறர் வசை பொருதவன் அவரொப்ப நடந்துகொள்ள வேண்டும்—உண்மை—இதோ புறப்படுகிறேன்—மனைவி பழிக்கும்படி மனையிலிருக்க மனமிசைந்திலது-வழிச்செல்லப் புறக்கண்ணும் அவசியமாதலால் மாணவனையும் இட்டுக்கொள்வோம்.

மூன்றும் காட்சி

இடம்:—கவியின் அகம்

(மனைவி வருந்தல்)

மனைவி:-ஐயோ! விளையாட்டு வினையாக முடிந்ததே—பெண்பலர் கூடி வம்பளப்பதாலன்றோ இவ்விதத் துன்பங்களெல்லாம்—அவசரத்தில் அறியாது ஏதோ பேசிவிட்டேன் ஆனுல் நாவினுல் சுட்ட அவ்வடு ஆராது வாட்டவே அவர் இவ்வாறு யாரென்ன சொல்லியும் கேளாது தேசயாத்திரைக்கென்று சென்ருர்—யான் உடன் வரலாகாதென்று பணித்தனரே-ஹா! தெய்வமே நேத்திரமில்லா என் நாதரைச் காத்திடுவது நின் பாரம்,

நான்காம் காட்சி

இடம்:—ஈழநாட்டில் ஓரிடம்

(கவிஞர் யாழ்வாசித்துக் கொண்டு பாடுகின்றனர். பலர் கேட்டு மெச்சுகின்றனர்)

கவி:—மாயையிலே மூழ்கி. மயங்கித் திரியாமலே மாசற்ற வாழ்வையே நாடுவோம்.

மாயையான் வடிவான மண் பெண் பொன் மூன்றையும் மறந்திடு மார்க்கத்தை அறிந்திடுவோம் நாமே.

('மாயையின்'—என்ற அடியைத் திரும்பிப்பாட ஆரம்பிக்கவும் வீணையும் பாட்டும் லேசாய்க் கேட்க முன்னணியில இருவர் பேசிக்கொள்கின்றனர்.)

ஒருவர்;—எவ்வளவு இனிமையான கானம்? இயற்புலமையும் இசைப் பெருமையும் ஒருங்கே பெற்ற இப்புலவர் பெருமானுக்கு நம் அரசன் பேட்டி கிடைப்பது அரிதாயிருக்கின்றதே! என்ன ஆச்சர்யம்!

மற்றவர்:— ஆச்சர்யமென்ன இதில்? அவைப் புலவர்கள் அழுக்காற்ருல் இவரை அணுகவிடாது தடுக்கின்றனர் இது சர்வ ஸாதாரணமே.

ஒருவர்:— சரிதான்-சரிதான்- இதுவும் மாயா விநோதங்களிலொன்று. இப்படித் தானே உண்மைத் திறமை உலகறியாது கிடக்கின்றது. ஆயின் எதற்கும் ஒரு நாள் வரும். அப்பொழுது அரசன் தானகவே இக்கவிப் பெருமானை வரவழைப்பார்.

[வீணையும் பாட்டும் நன்கு கேட்கின்றது.]

ஐந்தாம் காட்சி

இடம்:—ஈழநாட்டு அரண்மனை

அரசியின் ஊடல்.

அரசி:—மன்னினிற் கற்றோன் சிறப்புடையோனென்பதை நம் காதலர் மறந்தார் போலும். நாடு முழுதும் புகழும் செந்நாப் புலவருடைய யாழிசையை நாமும் கேட்டு மகிழக் கொடுத்து வைக்கவில்லை யென்ருல் நாம் இந் நாட்டின் அரசியாயிருந்து யாது பிரயோஜனம்? கண்ணிரண்டு மின்றிக் கலையின் சிகரத்தை யடைந்திருக்கிருரென்ருல், அது காண வேண்டிய காட்சிகளில் ஒன்றன்ருே? ஏன் அரசர் இன்னும் அவரைச்சபைக் கழையாதிருக்கின்ருர்- இருக்கட்டும்- அவர் தம் புலமையை நுகருமட்டும் அரசரைக் காண இசைகிலேன். எப்படியும் என்னுள்ளத்தை யவர் அறிந்து கொள்ளட்டும். [எழுந்து போகிருள்-புடவை சப்தம கதவைச் சாற்றித் தாளிடும் சப்தம்]

ஆரும் காட்சி

அரசர் பரராச சிங்கம் வருகை.

பாதரக்ஷை சப்தம்.

அரசன்:—(அரசி விளையாடுகிறுளென்று எண்ணி) ஹ ஹ ஹ ஹ ஹ! ஆண் பிள்ளைகளா ஏமாற்றுகிறவர்கள்- கதவையடைத்து விட்டால் உள்ளே தானிருப்பாயென்று எண்ணி விடுவேனெனப் பார்த்தாயா? ஊ, உர்- அதோ அந்தக் கிருஷ்ண விக்ரஹத்திற்குப் பின் மறைந்து நிற்பது தெரியாதோ-(விரைந்து நடக்கும் பாதரக்ஷை சப்தம்)- இங்கில்லை-(நகைப்புடன்) ஓஹோ! நிலைக் கண்ணுடியின் பின்னு நிற்கிருய்—(ஓடும சப்தம்) அகப்பட்டாயா—ஊம்— இங்குமில்லையே— சரிதான். உள்ளே தானிருக்க வேண்டும். (நடக்கும் சப்தம். கதவைத் தட்டும் சப்தம்) கண்மணி! கதவைத் திற-நேரமாயிற்று-இக்குளிர்ந்த மாலையில் நந்தவனஞ் சென்று உலாவலாம்.

அரசி:—(உள்ளிருந்தபடி—தடைபட்ட சப்தம்) புலவரைப் பேணுப் புரவலன் புகுவனம் பேதை யான் போகவுங்கூடுமோ—தாங்கள் தானே சென்று வாருங்கள்.

அரசர்:—(வருத்தத்துடன்) பெண்ணே! இதென்ன திடீரென இவ்வாறு பேசுகின்ருய். உன் பிணக்குக்குக் காரணம் யாது—காதலி! ஏன் இந்த மௌனம்? ஊம்-புலவர்களைப்போற்றுமென்னை, அவர்களைப் பேணுப் புரவலனென்ருல் பொருந்துமோ—உன் உட்கருத்தை யுணர்ந்து அதற்கு வேண்டுவன செய்தேன்—[போகிருன்— மெதுவாக நடக்கும் பாதரக்ஷை சப்தம்]

ஏழாம் காட்சி

நந்தவனம்

பட்சிகள் சப்தம்—

அரசன்:—ஆஹா! இயற்கையின் வனப்பு எவ்விதக் கவலையையும் சிறிது குறைக்கத்தான் செய்கிறது—தருக்களின் செழிப்பைப் பார்க்க உள்ளத்திலோர் உவகை பூக்கின்றது. ஹா! அவ்வாழை மரங்கள் திரண்டு வளர்ந்து குருத்தீன்று பச்சைப் பசேரெனக் காண்போர் கண்களைக் கவர்கின்றனவே—ஊம் அது யாது அம்மரப் பொந்தில்-கிளிக் குஞ்சுகளா—அவைகள் ஏனிவ்வாறு அஞ்சுகின்றன—எட்டிப் பார்ப்பதும், எதையோ கண்டு வெருண்டு தலையை உள்ளே இழுத்துக்கொள்வதுமாகவிருக்கின்றனவே—ஊம்- இதன் காரணம் என்னவாயிருக்கும—சரி, அரசியின் ஊடல் இவ்வஞ்சுகங்களின் ஓடல் இவ்விரண்டிற்கும் காரணங் காண வேண்டும்—வித்யாசாலைக்குச் செல்வோம்.

எட்டாம் காட்சி

வித்யாசாலை

புலவர் கூட்டம்.

ஒரு புலவர்:-ஓய், நாமும் புலவர்களென்று சொல்லிக் கவி பாடுகிறேமே, அந்தகக் கவி வீரராக முதலியாரின் கவியைக் கேட்டீரா?

மற்றவர்:—ஆஹா!

ஒட்டக்கூத்தன் கவியும்
ஓங்கிய கம்பன் கவியும்
பட்டப்பகல விளக்காய்ப்
பட்டவே- அட்டதிக்கும்
வீசுங்கவி வீரராகவனும
வேள ளன்
பேசுங்கவி கேட்ட பின்.

(அரசன் வரும் பாதரக்ஷை சப்தம)

அரசன்:—பொற்றமிழ் புலவீர்! நும் கொற்றவன் மனத்திடையுற்றது உணர்ந்து தெற்றெனப் புகல்வீர்—

(பாவலர் ஒருவரைப்பார்த்து ஒருவர் பேசிக்கொள்கின்றனர்.)

ஒருவர்:—(மெதுவாய்) என்னவோய் விழிக்கிறீர்-அரையன் மனதையறிந்து கூறுமே.

மற்றவர்:—ஏதுவோய்; இது நம் புலமைக்கு மிஞ்சிய விஷயமாயிற்றே.

ஒருவர்:—பொருமைப்பட்டு என்ன பிரயோஜனம? அந்தக் குருட்டுப் புலவரைக் கூப்பிட வேண்டியதுதான் - வேறு வழியில்லை-நம் யாராலுமிது ஆகாது.

மற்றவர்:—(ப்ரகாசமாய்) வேந்தர் பெரும! அந்தகக் கவி வீரராகவ முதலியாரொருவர் தம பேட்டி காண வந்திருக்கிருர். அப்புலவர் கண்ட சுத்தி பாடுவதில் வல்லவர்-அவர் உம் உள்ளக் குறிப்பை உரைக்கக் கூடும்.

அரசன்:—ஆயின் அவரை அழைத்து வருக.

மற்றவர்:—உத்திரவு.

(போகிருர்)

ஒருவர்:—மன்ன! அரசா அந்த கரைக் காணலாகாதாகையால் உங்களிருவருக்கும் நடுவே ஒரு திரையிடுதல் உததமம்.

அரசன்:—சரி–அவ்வாறே செய்க.

ஒருவர்:—இன்னுமொரு விண்ணப்பம்

அரசன்:—என்ன.

ஒருவர்:—வீரராகவக் கவி வந்ததும், தாம் இந்த வில்லையும் அம்பையும் தாங்கி ஓர் வீரனைப் போல் நிற்க வேண்டும் அதை அக்கவி தம் அகக்கண்ணுல் கண்டு உரைக்கிருரா பார்ககலாம்.

அரசன்:—நல்ல பரீக்ஷையே.

(புலவர் வருகிருர்)

எல்லோரும்:—வரவேண்டும்-வரவேண்டும.

ஒருவர்:—மாணவரே! பாவாணரை அத்திரையின் முன்னிருக்குந் தவிசில் அமரச் செய்யும்.

மாணவன்:—அப்படியே—சிவ சிதம்பரம்—சிவ சிதம்பரம்.

கவி:—ஊ— உம்—அண்ணுமலை—அண்ணுமலை.

எல்லோரும்:—தீ. தீ. ஐயையோ திரையில் தீப் பற்றிக் கொண்டதே.

அரசன்:—அதனை அறுத்து அப்புறம் போடு

மற்றவர்:—(மெதுவாய்) ஓய், புலவர் பொல்லாதவரர்க்கும்—உடன் வந்திருக்கும் மாணவனைத்தான் பாருமே. எவ்வளவு சாமர்த்தியமாய்த் திரையிருப்பதை சிதம்பரமென்ருன். அவரும் உடனே உணர்ந்து அண்ணுமலை என்றதும் அக்னி தோன்றியதே.

ஒருவர்:—பொறும். இன்னுமொரு பரீக்ஷை இருக்கிறது. (ப்ரகாசமாய்) பாவலரே! இப்போது அரசர் எவ்வாருள்ளார்—

கவி—ஹ ஹ ஹ! ராவணனுமில்லை, ரத்ன மயமானுமிலலை, ஏழுமரா மரங்களுமிங்கிலலை—ராமா! நீ இபபோது வில்லெடுத்த காரணம யாது?

அரசன:—சபாஷ்—(விலலைக் கீழே போடுகிற சப்தம) புலவர்கள் பெருமையைப் புகன்றிடலாகுமோ—புலவரேறே! என் மனக் கவலை இன்னதென அறிந்து உரை செய்வீராக.

கவி:—அப்படியே—(வீணையுடன்)

வடவைக் கனலை
பிழிந்து கொண்டு
மற்றுமொரு கால்
வடித தெடுத்து
வாடைத் துருத்தி
வைத் தூதி
மறுகக் காய்ச்சிக்
குழம்பு செய்து
புடவிக் கயவர்
தமைப் பாடிப்
பரிசு பெருமல்
திரும்பி வரும்
புலவர் மனம்போற்
சுடு நெருப்பைப்
புழுகென நிறைத்தாற்
பொறுப்பாளோ
அடவிக் கதலிப்
பசுங் குருத்தை
நச்சுக் குழலென்
றஞ்சி யஞ்சி
அஞ்சொற் கிளிகள்
பஞ்சரம் விட்(டு)
அகலத் துறையும்
அகளங்கா
திடமுசக
வாரண முகைத்த
தேவே தேவ
சிங்கமே
திக்கு விஜயஞ்
செலுத்திவரும்
செங்கோல நடத்தும்
எங்கோவே!

அரசர்:—(தனக்குள்) ஆம் உண்மை; இவரன்றோ புலவர்- இவரைக் காண்பதற்கு அரசி தொடுத்த ஊடல் சரியே-காற்றிலசைந்து கொண்டிருந்த வாழைக் குருத்தைக் கண்டு பாம்பென்று பயந்த கிளிப் பிள்ளைகளின் தன்மையை அப்பொழுது நாம் அறிய முடியாமற் போனதும் விந்தையே—(ப்ரகாசமாய்) மந்திரீ! இப் புலவர்பால் நாம் கொண்ட பெருமதிப்பைக் காட்ட, பொற்பந்தம், யானைக் கன்று முதலியவற்றுடன் பரிசு வழங்க இசைந்தோம்.

கவி:—(நகையுடன்)வேந்தே!

இல்லெனுஞ் சொலலறியாத சீமையிலவாழ், தானனைபபோய் யாழ்ப்பாணன் யான், பல்லை விரித்திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும் பாலியாமற், கொல்ல நினைந்தே தனது நால் வாயைப், பரிசென்றீ கொடுத்தான் பார்க்குள், தொல்லையென தொருவாய்க்கும் நால் வாய்க்கும், இரை யெங்கே துரப்புவேனே-

அரசன்:— ஆஹா! என்ன சொல்நயம்—யானையைத் தானங்கொடுத்தால் அதற்கு இரைபோடுவதெபபடி. புலவர் பிரானே! அக்கன்றுக்கு உணவளிக்கும் பொருட்டு ஒரு வளநாடும் தருகின்ருேம்.

கவி:—வீர பரராசசிங்கவேந்தே! நும் கொடையின ஏற்றத்தை இயம்பத்தரமன்று—புலவரின் வறுமையைப் போக்குவதே உங்கள் குலக் குணமாக விருக்க அதை அதிகம் புகழ்வது மிகையாகும்—அரசே! விடைபெற்றுக்கொள்கின்றேன்.

அரசன்:— கல்விச் செல்வ! ஈண்டு சிறிது காலம் இருந்து போக உம்மை மிகவும் வேண்டுகின்றேன்.

ஒன்பதாம் காட்சி

அந்தப்புரம்: அரசனும் அரசியும்.

அரசி:—நாதா! இவ்வந்தகக் கவியைப்பற்றிப் பிறா சிறப்பிக்கக் கேட்டதைப் பார்க்கிலும பதினமடங்கு அதிகமாக அன்றோ விருக்கின்றது அவரது திறமை.

அரசன்:—அவருடையஞாபக சக்தியும் சொல்வன்மையும் ஒப்புயர்வற்றது.

அரசி:—நேற்று ராமாயாணம் பிரசங்கித்தாரே, அப்பொழுது எவ்வளவு நுட்பமாயும், ஆராய்ந்தும் பொருள் கூறினர். கம்பரே, இவ்வளவு ஆழ்ந்த கருத்துக் கொண்டுதான் பாடினுரோ என்பதே எனக்குச் சந்தேகமாக விருக்கின்றது.

அரசன்:—ஆம் ஆம்-அதற்கு அவ்வப்போது வேதாந்த வியாக்யானமும் செய்தாரே. அந்த

பதினேரு மணிக்கு

இப்பொழுது மணி பதினென்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்தமினிது" என்ருர் ஒரு கவி, ஆனுல் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரவிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 157

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,

7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சவூர்.

உபமானங்கள் இப்பொழுதும் என் உள்ளத்தைக் கவர்ந்து நிற்கின்றன...

அரசி:—அதோ அவரும் தன் மாணவனுடன் வருகின்றார்-அந்தகராயினும் ஆழ்ந்த அறிவு.

கவி:—வாழ்க எம் அரசே! வாழ்க நின் பெருமிதம்.

அரசர்:—வருக, வருக, அவ் வாசனத் தமர்க.

கவி:—(கவலை தோன்ற) உம் அப்பாட-(உட்காருகிறார்)

அரசர்:—புலவர் பெரும! யாது கவலை?

கவி:—கவலையொன்றுமில்லை. நேற்றிரவு ராமாயணப் போர் ஒப்படி செய்தேன். அதனல் சிறிது சோர்வு.

அரசன்:—(நகையுடன்) ஓஹோ! கண்டு முதல் யாதோ?

கவி:—அடித்தது பத்தாயிரம். அதில் நெல் நாலாயிரம் புல் நாலாயிரம், கல் ஈராயிரம்.

அரசன்:—(அரசியிடம் மெது வாய்) பெண்ணே! கேட்டனையா கவிஞரது உவமையை.

அரசி:—ஆம், ராமாயணத்திலுள்ள பாக்களில் நாலாயிரம் நெல்லைப்போல் பயனுறும் பதமானவையென்றும், நாலாயிரம். புல்லைப் போல் சாதாரணமென்றும், இரண்டாயிரம் கல்லைப்போல் கடினமானவையென்றும் கூறுகிறார்.

அரசன்:—இன்னங் கலைமகள் கைம் மீதிற் புத்தகமேந்தியுந்தப் பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பாளென்ன புண்ணியமோ கன்னன் சயந்தன் கவி வீரராகவன் கச்சியிலே தன் னெஞ்சம் ஏடெனக் கற்றுன் கன் முத்த மிழையுமே.

பத்தாம் காட்சி

கவிஞர் பல்லக்கில் போகிறார்

போயிகள் சப்தம்-வாங்கா-எக்காலம் ஒலி)

மனைவி:—(பரபரப்புடன்) அதோ என் நாயகர்தான் வெற்றி விருதுகளுடன் வருகிறார். ஆரத்தியுடன் எதிர்கொண்டழைத்து வருவோம்-(படிக்கட்டுகளில் ஓடி வரும் சப்தம்-பல்லக்கு. போயிகள் சப்தம் நிற்க) நாதா! அடியாள் நமஸ்காரம்—தங்கள் இல்லுள் எழுந்தருளுங்கள்-

கவி:—யாம் வளநாடும் இளங் கன்றும் பெற்று வந்தோம்.

(பேசிக்கொண்டே வீட்டிற்குள் போகிறார்.)

நங்காய்! நீ முன் நவின்றதை நினைத்து வருந்தாதே. அவ் வார்த்தைகளே எனக்கு ஊக்கமளித்து இவ்வுயர்வைத் தந்தன.

மனைவி:—ஏதோ பேதைமதியால் பிதற்றிவிட்டேன். அதற்குத் தக்கபடி தண்டனையாகத்தான் இவ்வளவு காலம் தனிமையாய்ச் சிறைவாசஞ் செய்தேனே—இவ்வாசனத் தமருங்கள்.

கவி:—போகட்டும் — இப்படி என்னருகில உட்கார்.

மனைவி:—பிராணபதி! எனக்கென்ன கொண்டு வந்தீர்?

கவி:—உனக்கா—களபம்.

மனைவி:—எங்கே என் கழுத்தில் பூசும்.

கவி:—ஊம், மாதங்கம்.

மனைவி:—நாம் வாழ்ந்தோம்.

கவி:—வேழம்வேழம்

மனைவி:—கரும்பா, நீர்தானே தின்னும்.

கவி:—இல்லை—பகடு.

மனைவி:—எருதா—நிலம் உழலாம்,

கவி:—அதுவுமில்லை-கம்பமா

மனைவி:—கம்புமா களியாகும்

கவி:—ஐயையோ! கைம்மா.

மனைவி:—அப்பப்பா, யானையென்று சொல்லவா இவ்வாறெல்லாஞ் சுற்றுகிறீர்.

கவி:—ஆம். உன்னிஷ்டப்படி ஒரு யானைக்கன்றும் அதை வளர்பபதற்காக வளநாடொன்றும் ஈழநாட்டு வேந்தனிடமிருந்து பெற்று வந்தேன்—இனி உங்கள் மாதர் மகா சபையில் என்னை நிந்திக்கமாட்டாயே.

மனைவி:—பார்—திரும்பவும் ஆரம்பிக்கிறீரே—அதன் பின் அம்மாதிரியான வம்புக் கூட்டமே கூடுவதில்லையே.

கவி:—அப்படியா! மெத்த சந்தோஷம். நம் நாட்டுக்கே க்ஷேமம்.



ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எம். எல். ஏயின் ஜ்யேஷ்ட குமாரன் ஸ்ரீ டி. டி. நரசிம்மனுக்கும், புனு மிலிடரி அக்கவுண்ட்ஸ் கண்ட்ரோலர், திவான்பஹதூர் ஆர். சுந்தராச்சாரியின் புத்திரி ஸ்ரீமதி பத்மாவுக்கும் சென்ற மாதம் 28-ம் தேதி நகரில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.

நவ நாகரீகம்

ஒரு கரை

காசினி எழுதியது

* * * 'நேற்று டவுன் பக்கம் போயிருந்தேன்—!, என்று சொல்லிவிட்டு, நளினதேவி மௌனம் சாதித்தாள்.

'போயிருந்த இடத்தில் என்ன விசேஷம்? அதைச் சொல்ல மாட்டேன் என்கிறேளே?' என்று பங்கஜம் ஆவலுடன் கேட்டாள்

'நீ இப்படிக் கேட்கணம் என்று தானே அவள் இப்படிச் சொன்னுள்!' என்று மாலினி சொன்னதும் பங்கஜத்துக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

'நான்தான் எதுக்கும் ஒரு அசடு இருக்கேனே?' என்று அவள் சலித்துக்கொண்டாள்.

'அசடு என்று யாரு சொன்னது? உனக்கு புதிய தினுசுகளைப்பற்றித் தெரிந்துகொள்ளுவதில் ஒரு ஊக்கம். அதுதான் ஆவல் இருக்கிறது! இது மெச்சத்தக்க குணம்னு?' என்று நளினதேவி சொன்னுள்.

'சரி; பட்டணம் போயிருந்த இடத்தில் என்ன விசேஷம்? அதை சொல்லி எங்கள் எல்லாருடைய ஆவலையும் தீர்த்து வையேன்?' என்றுள் மாலினி.

'வரலக்ஷ்மி அம்மனுக்குச் சாத்த ஒரு பட்டு வாங்கப் போயிருந்தேன்! அங்கே ஒரு புடவை பார்த்தேன். விலை முப்பத்தி எட்டு ரூபாய்கள். ஆறு கஜம்தான். சரிகை கொஞ்சம் போட்டிருந்தது!' என்று நளினதேவி சிரித்தவண்ணம் சொன்னுள்.

'சரி, சொல்லேட்டா போயேன்!' என்று சட்டென்று மாலினி கோபித்துகொண்டாள்.

'ஹே! மந்திரகாளி!' என்று கூறிவிட்டு, நாற்காலி மறைவில் தான் ஒளித்து வைத்திருந்த புடவையை நளினதேவி எடுத்தாள். முதலில், சாதாரண சாகலெட்-வர்ணப் புடவை?' இவள் இவ்வளவு சொல்லும்படி என்ன? என்று எண்ணினேன். அதற்குள் கரையைப பார்த்தேன்; புதிய பாஷனுக ரொம்பவும நன்ருக இருந்தது

இந்தப் புடவை நான் சற்று முன் சொன்னதுபோல் சாகலெட் நிறமாக இருந்தது. இதில் ரொம்பவும் ஆழ்ந்த நிறமாக இல்லாமல் நிதானமாக இருந்தது. ஒரு பக்கம் சரிகைக் கோடுகள் விழுந்த முக்கால்முழ அரக்குத் தலைப்பு; மற்றென்று புனுத் தலைப்பு.

நாலுவிரல் அகலத்துக்குமேல் கரை போட்டிருந்தது. சுண்டு விரல் அகலத்துக்குக் குறைவான அரக்குப் பட்டியில் சரிகைப் பட்டை போட்டிருந்தது. பிறகு சுமாருக்கு இரண்டுவிரல் அகலத்துக்கு, வெண் பட்டிலீ ரிப்பன் மாதிரியில் போட்டிருந்தது. அடுத்தாற்போல் விரல் அகலத்துக்கு அரக்குப்பட்டி; இதில் எடுப்பாக, மெல்லியதாக மூன்று வரிசைக்கு பாம்புச் சட்டைப் பேட்டு பளிச்சென்று சரிகையில் போட்டிருந்தது. மறுபடி இரண்டு விரல் அகலத்துக்கு வெண்பட்டுப் பட்டி, முதலில் போட்டிருந்தது போல் அரக்குப்பட்டியில் சரிகைப் பட்டை; கடைசியாக மிகவும் சிறிய வெண்பட்டுப் பட்டி. கரை ரொம்பவும் நன்ருகத்தான் இருந்தது. சரிகையும் பளிச்சென்று எடுப்பாக இருந்தது மொத்தத்தில் புடவை, அழகாகவும், களையாகவும் இருந்தது.

ஒரு லோலக்கு

'தங்கத்திலதான் செய்திருந்தது! இருந்தாலும் சரோஜா போட்டிருந்த லோலக்கு ரொம்பவும் நன்ருக இருந்தது!' என்றுள் கமலினி.

'ஆனு தங்கத்திலே செய்யாமல், பின்னே எதிலை செய்யணம் என்கிறுய்? பித்தளையில் செய்திருந்தால், இன்னும் நன்ருக இருந்திருக்கும் என்று சொல்லுகிறுயா?' என்றுள் என் அத்தை,

'வைரம், முத்து, சிகப்பு பச்சை என்று எதுவுமே வைக்கலை; வெறும் தங்கம்தான்; இதைத்தான் சொன்னேன்!' என்று கமலினி கோபித்துக் கொண்டாள்

'அது என்ன தினுசு?' என்று நான் கேட்டேன்.

அந்த லோலக்கு முதலில் இலைகள் மாதிரியில் இருந்து, கடைசியில், சிறிய திராக்ஷப் பழக் கொத்து மாதிரியில் முடிந்ததாம். அதாவது, இரண்டு இலைகளுடன் பறிக்கப்பட்ட திராக்ஷைக் கொத்து மாதிரியில் இருந்தது என்று வைச்சுக் கொள்ளேன். கனமேஇல்லாமல், ஒரு பக்கம் அப்படியே போலாக இருந்ததாம். அதாவது உருண்டை வடிவமாக இல்லாமல், பாதியில், நீளவாட்டமாக நறுக்கப்பட்ட பழக் கொத்து மாதிரியில் இருந்ததாம். அதாவது லோலாக்கின் பின் பக்கம், சும்மா வளைந்த தட்டுத்தான் தெரியும். இதை ஒரு கொக்கியினுல் அப்படியே காதில் மாட்டிக் கொண்டிருந்தாளாம். இந்த லோலக்கு ரொம்பவும் நன்ருக இருந்ததாகக் கமலினி சொன்னுள்.



இராமநாதபுரம் பிரபல ஜவுளி வியாபாரி ஸ்ரீ எஸ். வி. தட்டியப்ப செட்டியார் தம்பதிகள். இவரது சஷ்டி அப்த பூர்த்தி விழா 1942ஞ ஜூலைமீ 22வ புதன்கிழமை வெளிப் பட்டணத்திலுள்ள இவரது மாளிகையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பல ராஜாக்களும், ஜமீந்தார்களும் விஜயம் செய்தனர்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம்
கீர்த்தனம் 10

I

பல்லவி

சூதாமுராரே யீ வேட்கனு
ஸுததுலார நேடு

அனு பல்லவி

(புரு) ஹூதா துல கருதைன ஈ ஓடலோ
யுவதுலெல்ல ஹரினி கூடியாடேரு

சரணம்

1. ஒகரி கொகரு கந்தமு னலதேரு
ஒகரி கொகரு திலகமு தித்தேரு
ஒகரி கொகரு விடமு லொஸகேரு
ஒகரி கொகரு ஹாரமு வேஸேரு
2. ஒகரி கொகரு வலுவலு கட்டேரு
ஒகரி கொகரு ரவி கெலு தொடிகேரு
ஒகரி கொகரு கௌகிடகூர் சேரு
ஒகரி கொகரு தமலோ ஸொக்கேரு
3. ஒகரி கொகரு பாடலு பாடேரு
ஒகரி கொகரு ஸரஸமு லாடேரு
ஒகரி கொகரு ஹரியனி ஜூ சேரு
ஒகரி கொகரு கானக ப்ரமஸேரு

II

ஸுததுலார!—பெண்களே!
நேடு—இன்று
ஈ வேட்கனு—கோபிகைகளுடன் பகவான் ஓடத்தில் வீற்[றிருந்து அவர்களை மகிழ்விக்கும் லீலா விநோதங்களை
சூதாமுராரே—காண்போம் வாருங்கள்
புருஹூதா துலகு—தேவர்களுக்கும்
அருதைன—கிடைக்கத்தகாத
ஈ ஓடலோ—இந்த ஓடத்தில்
யுவதுலெல்ல—யுவதிகளான கோபிகைகளெல்லாரும்
ஹரினி கூடியாடேரு—பரமாத்மாவான கண்ணனின் சாமீப்[யத்தை அடைந்து ஆடிப்பாடி மெய்மறந்து நிற்கின்றனர்
ஒகரி கொகரு—ஒருவருக்கொருவர்
கந்தமுனு அலதெரு—வாசனை மிகுந்த சந்தனத்தைத் தெளித்து[க் கொள்கிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
திலகமு தித்தேரு—திலகங்களை இடுகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
விடமுலு ஓஸகேரு-தாம்பூலங்களை மடித்துக் கொடுக்கிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
ஹாரமு வேஸேரு—புஷ்பஹாரங்களைப் போடுகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
வலுவலு கட்டேரு—ஆடைகளை உடுத்துகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
ரவிகெலு தொடிகேரு—ரவிக்கைகளை சரிப்படுத் துகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
கௌகிடகூர்சேரு—ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
தமலோ ஸொக்கேரு—தனக்குத்தானே பரவசம் அடைகிறார்[கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
பாடலு பாடேரு—விதவிதமான பாட்டுகளை பாடுகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
ஸரஸமுலு ஆடேரு—உல்லாஸமாக பேசுகிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
ஹரியனிஜூசேரு—கண்ணனை ஸ்ரீமஹாவிஷ்ணு என்றறிந்து [தரிசிக்கிறார்கள்
ஒகரிகொகரு—ஒருவருக்கொருவர்
கானகப்ரமஸேரு—கண்ணனை காணுது பிரமித்து நிற்கின்றார்[கள்.

III

முன் கதைச் சுருக்கம்:—

கண்ணன் வேணுகானத்தைக் கேட்டு பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனு தீரம் சென்று, அங்குள்ள ஓடத்தில் அவனுடன் ஏறிக்கொண்டு தங்கள் பாக்யத்தை எண்ணி மகிழ்ந்து ஓடப் பாட்டு பாடிக்கொண்டு ஓடத்தை நடத்தலானுர்கள். அப்பொழுது கண்ணன் கோபியர்களின் மனதை சோதிப்பதற்காக தீடுப்பை மேற்குப் பக்கம் போடச் சொல்ல, கோபியர்கள் கோபம் கொண்டு கண்ணன் ஓடத்தை ப்ரவாகத்தில் மூழ்கடிக்க யோசனை செய்வதாக எண்ணி அவன் செய்கைக் கண்டித்தார்கள்.

சூதாமு ராரே:—இது நௌகா சரித்திரத்தில் 10-வது கீர்த்தனம்.

இந்தக் கீர்த்தனத்தில் இந்திராதி தேவதைகள், கண்ணனுடைய சாமீப்யத்தை அடைந்த கோபியர்களின் பாக்யத்தை வியந்து பேசி, அவர்கள் சந்தோஷம் கொண்டு ஆடிப்பாடி விளையாடும வைபவங்களை வர்ணித்துப் புகழ்வது கூறப்பட்டுள்ளது.

IV

ராகம் (கர்னுடக) காபி — மிச்ர சாபு தாளம்

22—வது மேள ஜன்யம்—ஆ. ஸம்பூர்ணம் அவ. ஸ்நிதபமகமரிஸ.

(கர்னுடக காபி ராகத்தில் ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட மற்ற கீர்த்தனங்களிலுள்ள ஸஞ்சாரங்கள் இக்கீர்த்தனத்தில் காணப்படவில்லை. பழைய வர்ணமெட்டானதால் அப்படியே வெளியிட்டுள்ளேன்.)

பல்லவி

; ரீ கா	மா ; கா மா	பா ; ;	பா ; ; ;
ஜு .	தா . மு	ரா	ரே .
; மா பா	தா ; பா ;	மப ம மா க	ரீ ஸா ரீ ;
ஈ .	.	வேட்	க . னு
; ஸா நீ	தா ; நீ ஸா	ரீ ரீ ஸா	ரீ ; பா மா
ஸு த	து லா .	. ர .	நே . .
மா கா ரீ	ஸா ; ; ;	; ; ;	; ; ; ;
டு . .	.		

அனுபல்லவி

(தப) பாமா	பா ; தா ;	தா நீ ;	ஸ்ா ; ரீ ;
(புரு) ஹூ .	தா .	து ல	க ரு
கா மா ;	கா ; ரீ ;	ஸ்ா நீ ;	தா ; பா ;
தை .	ன ஈ	ஓ .	ட லோ
; தா நீ	ஸ்ா ; ரீ ;	ஸ்ா நீ ;	தா ; பா ;
யு வ	து லெல்	ல . .	ஹ ரி
பா மா பா	தா ; பா ;	மா மா கா	ரீ ; ஸா ;
னி . .	கூ டி	யா .	டே ரு

சரணம்

; ஸா தா	பா ; பா ;	பா பா ;	பா மர பா ;
ஒ க	ரி கொ	க ரு	கந் .
மா பா ;	தா ; பா ;	மா மா கா	ரீ ஸா ரீ ;
த மு	ன ல	தே . .	ரு .
ரீ மா ;	கா ; ரீ ;	ஸா நீ ;	தா ; நீ ;
ஒ க	ரி கொ கா	க ரு	தி ல
ஸநி ஸா ;	ரீ ; ரீ கா	மக பா மா	மா கா ரீ ;
க மு	தி த் .	தே . .	ரு .

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது)

உயிர் மீட்சி

சிறு கதை

★

"நியாயவாதி" எழுதியது

1

நிர்மலமான வானவீதியில் கதிரவன் பவனி வந்துகொண்டிருந்தான். புனிதமான கங்காநதிக்கரையில் அழுக்குடை தரித்த ஒரு முரட்டு மனிதன் உட்கார்ந்துகொண்டு நீரின் ஓட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவனது முகத்தோற்றத்திலிருந்து அவனது மனம் ஏதோ பலமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தது என்பது புலனாகும்.

அப்பொழுது அவ்வழியே வந்த இரண்டு மூன்று மனிதர்கள் அவனை அலக்ஷியமாய் நோக்கிவிட்டு அப்பால் சென்றனர். அவர்களில் ஒருவன், "இதோ பார்த்தாயா! இம்மனிதன்! பாவம்! தன் பசியைத் தணிப்பதற்காக தண்ணீரைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஏதேனும் ஒன்றிரண்டு மீன்கள் தனக்குச் சிக்குமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறான்" என்று கேலி செய்தான். மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து நகைத்தார்கள்.

அச்சமயத்தில் அம்மனிதன் எதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருந்தான் என்பதை அவர்கள் அறிந்திருப்பாராயின் அவர்கள் அப்படி பரிகாசமாய் சிரித்திருக்கமாட்டார்கள். அப்பொழுது அப்பிரதேசத்தில் தனது ஆட்சியை ஏற்படுத்தி மிகத்திறமையாய் அரசாண்டு வந்த மொகலாய அரசனை பாபரைக் கொல்லுகிற விதம் எப்படி என்பதைப்பற்றி அம்மனிதன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அந்நியநாட்டிலிருந்து வந்து ஒரு ராஜ்யத்தை கிறுவிய பாபர் மீது அம்மனிதனுக்கு க்ஷாத்திரம் இருந்தது ஒரு அதிசயமல்ல. ஏனெனில் அவன் க்ஷத்திரிய ஜாதியைச்சேர்ந்தவன். சுதந்திரத்தை விரும்புவன். டில்லி சிம்மானத்தை பாபர் கைப்பற்றி தனது ஆட்சியை சுற்றிலும் பரவச்செய்தது அவ்விராஜ க்ஷத்திரியனுக்கு தாங்கொணுத குரோதத்தைக் கொடுத்தது. பாபரின் கடுமையான சட்டதிட்டங்களும் அவனது ஆத்திரத்துக்கு எரியும் தீயில் இடப்படும் எண்ணெய் போல் இருந்தன.

எனவே அவன் பாதுஷாவைக் கொன்றுவிட்டு தனது தேசத்தை மீட்பதைவிடத் தனக்கு மேலான தர்மம் வேறொன்றுமில்லை என்று எண்ணினான். சமயம்பார்த்து பாபரைக் குத்திக் கொலைசெய்வது என்ற விரதத்துடன் அவன் கிளம்பினான். அவனது அழுக்கடைந்த உடையில் ஒரு கத்தி மறைந்திருந்தது.

II

டில்லி நகரத்தின் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தான் அந்த க்ஷத்திரியன். பாதுஷா அரண்மனையிலேயே அடைபட்டுக்கிடப்பவரன்று என்பது அவனுக்குத் தெரியும். அடிக்கடி அவர் மாறுடை தரித்து நகரசோதனை செய்யும் வழக்கமுடையவர் என்பதை அவன் அறிவான். ஆதலால் அவன் பாதுஷாவை நகரத்தின் பாதைகளிலும் தெருக்களிலும் தேடித் திரிந்துகொண்டிருந்தான். அவர் அகப்பட்டுக்கொண்டால் தனது கத்திக் குத்துக்கு அவர் தப்பமாட்டார் என்ற நிச்சயம் அவனது மனதில் வேரூன்றியிருந்தது.

வீதியில் பெருத்த ஆரவாரம். மனிதர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரும் பேரிரைச்சலிட்டுக்கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு பெரிய வீடு இடிந்து விழுவது போலவும், ஒரு பிரம்மாண்டமான மரம் சாய்வது போலவும் சப்தம் தொனித்தது, ஒரு பெரிய யானை மதவெறியுடன் பயங்கரமாய் தனது துதிக்கையை இங்குமங்கும் ஆட்டிக்கொண்டும் அதன் வசம் அகப்பட்டதையெல்லாம் எறிந்துகொண்டும் வந்துகொண்டிருந்தது.

கன்னங்கரேரென்று பர்வதம் போல் வந்த அம் மிருகம் எதிரில் ஒன்றையும் நிற்கவொட்டாமல் அடித்துத் தள்ளிக்கொண்டும், துதிக்கையால் வீசி இருபுறமுள்ளவற்றையும் எடுத்து வீசிக்கொண்டும், வெண்மையான கூரிய கத்திகளைப்போன்ற தனது தந்தங்கள் குரூரமாய் பிரகாசிக்க தனது வாய் வழியே அருவிபோல் மத நீரைப் பொழிந்துகொண்டும், காக்ஷியளித்த தென்றால் அதைவிடப் பயங்கரமான தோற்றம் வேறு உண்டோ? எங்கே பார்த்தாலும் ஜனங்கள் நடுக்கத்துடன் அபயக்குரலிட்டுக்கொண்டு தாறுமாறுமாய் நாற்புரங்களிலும் ஓடலாயினர்.

இப்படியிருக்க, ஒரு எளிய குழந்தை—தீண்டாத ஜாதியைச் சேர்ந்த குழந்தை—பசியால் வருந்தி நடக்க மாட்டாமல் ஓடுகையில் கால்தடுக்கி, யானை வரும் வழியில் விழுந்து விட்டது. அப்படி விழுந்த பின் ஒரு நிமிஷ காலம் சென்றிருக்குமாயின் அக்குழந்தை அக்கொடிய யானையின் தூண் போன்ற கால்களொன்றால் நசுக்குண்டு ரத்தத் துவையலாய்ப் போய் இருக்கும். அதே க்ஷணத்தில் வேலைக்காரன் போல் உடை தரித்த ஒருவன் யானைக்கு எதிரே தாவிக் குதித்து குழந்தையை தன்னிரு கரங்களாலும் வாரி எடுத்து பின் பக்கமாய் பாய்ந்து ஓடினான். யானை வெறியுடனே ஆற்றின் பக்கம் சென்றது.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு திரும்பிய வேகத்தில் அம்மனிதனது முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பாகை தவறி தரையில் விழுந்தது, ஏழைச் சிறுவனை யமனிடமிருந்து மீட்ட வீரனது முகம் யாருடையதென்பது எல்லாருக்கும் தெரிந்தது. தனது உயிரையும் மதியாமல் அவ்வெளிய ஹரிஜனக் குழந்தையை காத்தது பாபர் பாதுஷாவே!

அதுவரையில் தொனித்த பேரிரைச்சல் திடீரென்று அடங்கியது. அவ்வதிசய காக்ஷியைக் கண்ணுற்றவர்கள் எல்லாரும் தாங்கள் கண்டது கனவோ நனவோ என்று பிரமித்த வண்ணம் நின்றனர்.

அப்படி எல்லோரும் பிரமித்து இருக்கையில், ஒருவன் அரசன்முன் ஓடிவந்தான். பாபரின் தாழ்க்களில் விழுந்து தன் கையில் இருந்த கத்தியை அவன் அவரிடம் காட்டி பின்வருமாறு கூறினான்.

"மஹாப்பிரபு! நான் தங்களுடைய தலைவன். இன்று நான் உங்களை கொல்ல வந்திருந்தேன். உயிரை அழிக்கிறவனைவிட உயிரைக்காக்கிறவன் எவ்வளவு மேலானவன், கடவுளால் ஆக்கப்பட்டிருப்பவனை கொல்ல என் கை பலமுள்ளதன்று. இதோ இந்த கத்தியை எடுத்து தங்களை கொல்ல எண்ணிய என்னை கொன்று விடுங்கள்" என்று அவன் பிரார்த்தித்தான். தனது கொடிய எண்ணத்திற்காக பச்சாத்தாபப்பட்டு கரைந்து உருகி காலடிக்குக் கீழ் கிடந்த அந்த க்ஷத்திரியனை பார்த்து பாபர் துணை புரிந்தார். அவரது முகத்தில் ஒருபுதுமையான ஒளி வீசியது. அவர் கீழே கிடந்த மனிதனை தனது கரங்களால் மெல்ல எடுத்து பின் வருமாறு கூறினர்.

"நண்பா அப்படி நீ சொல்லாதே. உன்னைக் கொல்வதைவிட உன் உயிரைக் காப்பதே மேலான நீதியென்று உனது வாய் மொழியிலிருந்தே தெரியவில்லையா? உனது குற்றத்தை ஒப்புக் கொண்டு அதற்காக வருந்துகிற உன்னைக் கொல்வது எனக்கு நியாயம் ஆகுமா? இந்தக் கத்தியை. நீயே எடுத்துக்கொள். இதை எனது ஸேவையில் உபயோகப் படுத்து. இன்று முதல் உன்னை எனது அரண்மனைக் காவலனாக நியமிக்கிறேன்"

பகதூர் ஷாவின் வார்த்தைகளைக் கேட்டு அம்முரட்டு மனிதன் தலை வணங்கி கண்ணீர் வடித்து அழுது நின்றான்.

சீவக சிந்தாமணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளையும், ஊரையும் சீதனமாகக் கொடுக்க வேண்டுமென்று உன் உறவினர் விரும்பினால், அதை அளித்து உன்னைச் சேர்வேன். அவ்விதம் செய்யேனானால், அஞ்சின பகைவர் மீது படைக்கலம் விட்டவனாவேன்" என்ற வாசகங்களைக் குணமாலை படித்து மனம் பூரித்திருந்தாள்.

அந்தச் சமயத்தில் குணமாலையின் செவிலித்தாய் (வளர்த்த தாய்) அங்கு வந்தாள்.

"குணமாலை! உன் அம்மான் மகன் பொற் குவியலுடன் உன்னை மணப்பதற்கு வந்து காத்திருக்கிறான். உன் தந்தையும், நேற்று அதற்கு இணங்கியவர் போன்று பேசினர்......" என்று செவிலித்தாயே கூறியவளவில், குணமாலை, செவிலித்தாயின் வாயைப் பொத்திக் கோபம் கொண்டாள்,

"யானையிடமிருந்து என் உயிரைக் காத்த வீரன் சீவகசாமிக்குக் கூலியாக, என்னை ஏவல் செய்யக் கொடுப்பதல்லாமல், வேறு ஒருவனுக்குக் கொடுக்க எண்ணியது ஏன்? என்னை சீவகசாமிக்கு கொடுக்காவிடில் 'யான் இறத்தல், தவத்தைச் செய்தல்' என்றஇரண்டிலொன்றைச் செய்வேன்" என்று கூறிக் கண்ணீர்விட்டாள் குணமாலை.

"உன் மனம் அவனிடம் சென்றது தக்கதே. யான் அறியாமல் கூறினேன்; நீ கருதியவாறே நடக்கும்" என்று செவிலித்தாய் தேற்றிப் பின்னர் குணமாலையின் தாயான விநயமாலையிடம் நிகழ்ந்ததைக் கூறினாள். விநயமாலை மனமகிழ்ந்து தன் கணவன் குபேரமித்திரனிடம் அதைக் கூறினாள், குபேரமித்திரன், நான்கு அறிஞரை கந்துக்கடன் சம்மதியைப் பெற்றுவரும்படி அனுப்பினான். குபேர் மித்திரன் எண்ணத்திற்குக் கந்துக்கடன் உவகையோடு சம்மதித்தான். உடனே குணமாலைக்கும் சீவகனுக்கும் மணம் நிகழ்ந்தது. சீவகன், குணமாலையின் நீங்காத இன்பத்தே மயங்கிப் பொழுது போக்கியிருந்தான்.

அடுத்த வாரம்:—
சிறையும் விடுதலையும்

பண்டைக்காலப் போர் முறை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யை நடத்த விரும்பாமல் சாவதே மேலானது என்று எண்ணியும் இருக்கலாம். இந்தத் துறையை மறக்காஞ்சி என்று கூறுவர் பழைய நூலாசிரியர்.

"ஈன்று புறந்தருதல்
என்றலைக் கடனே
சான்றேன் ஆக்குதல்
தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கள்
வேந்தற்குக் கடனே
யொளிறுவாள்
அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே" என்

னும் புற நானூற்றுச் செய்யுள் பழைய தமிழ் நாட்டு மக்கள் கொண்டிருந்த வீர உணர்ச்சியை நன்ருக எடுத்துக் காட்டுகிறது. (முந்திய கட்டுரை 23-8-42-ம் இதழில் வெளி வந்தது.)

சித்திரமும் சிருங்காரமும்

"லிடியா"

யுனைடட் ஆர்டிஸ்ட் வெளியீடான "லிடியா" என்ற படத்தில் லிடியாவின் நான்கு காதலர்களைப்பற்றிய கதை காணப்படுகிறது.

லிடியா ஒரு பெரிய சிசு சம்ரக்ஷண விடுதியை ஸ்தாபிக்கிருள்: இதற்காக அவளை எல்லோரும்ஒரு முகமாகப்பாராட்டுகின்றனர்: இவை யாவும் லிடியா முன்னிலையிலேயே நடக்கின்றன.வைபவம் முடிந்தவுடன் லிடியாவைக் காதலித்த நால்வர்களுள் ஒருவரான டாக்டர் மைக்கேல் பிட்ஸ்பாட்ரிக் அவளை அண்டுகிருர். இவர்கள் இருவரும் பல வருஷங்களாகச் சந்தித்தது கிடையாது. இவர்களுக்கிடையே சில அபிப்பிராய பேதங்கள் இருந்த போதிலும் இந்தச் சமயத்தில் இருவரும் அவற்றை மறந்துவிடத் தயாராகின்றனர். மைக்கேலுடன் அவரது வீட்டிற்குப்போய் தேநீர் அருந்தவும் லிடியா சம்மதிக்கிருள்,

இரண்டு தினங்களுக்கப்புறம் லிடியா தான் வாக்களித்த பிரகாரம் மைக்கேல் கிருஹத்திற்குப் போகிருள். அங்கு சென்றவுடன் பாப் வில்லார்டும் ப்ராங்க் ஆப்ரியும் இருப்பதைப் பார்த்து அவள் ஆச்சரியமடைகிருள். இவ்விருவரும் கூட பல வருஷங்களுக்கு முன்பு லிடியாவைக் காதலித்தவர்கள் தான். காலக்கிரமத்தில் மைக்கேல் பிரபல டாக்டரானர்: பாப் ஒரு ராத்திரி விடுதியின் சொந்தக்காரரானர். குருடான ப்ராங்க் பியானோ வாசிப்பதில் நிபுணரானர். தாங்கள் மூவரையும் மணக்க லிடியா ஏன் மறுத்து விட்டாள் என்பதை அறியும் நோக்கத்துடன் அன்று அவர்கள் பழைய விஷயங்களையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டு காரணம் காண முயன்றனர்.

இது காரணமாக தங்களது பால்யதசையைப்பற்றியும் அப்போது தங்களுடைய உள்ளத்தில் இருந்த காதலுணர்ச்சி பற்றியும் அவர்கள் பேசுகின்றனர். முதன் முதல் லிடியா ஒரு பெரிய விருந்துக்கு வந்த தினத்தன்றே அவளைத்தான் சந்தித்ததாக டாக்டர் மைக்கேல கூறுகிருர், இதே மாதிரி மற்ற இருவரது ஞாபகமும் அதே தினத்தன்று போகிறது.

லிடியாவின் பாட்டி ஒரு பெரிய பணக்காரி.லிடியா இயற்கையாகவே சுருசுருப்பும் ஆர்வமும் நிரம்பியவள்: தான் முதன் முதலாகக் கலந்து கொள்ளும விருந்துக்கு உடுத்திச் செல்வதற்காகத் தயாரித்து வைத்திருந்த ஆடையை அவள் தன் பாட்டிக்குக் காட்டுகிருள். இந்த உடை விஷமமாக பாட்டிக்குப் பேத்தியின் மீது தகராறு ஏற்படுகிறது. அது ரொம்பவும் நவநாகரீகமாக இருப்பதாகப் பாட்டி கூறுகிருள். இவ்விதம் இவர்கள் வாதாடிக்கொண்டிருக்கும் போது டாக்டர் பிட்ஸ்பாட்ரிக் தன் மகன் மைக்கேலை அங்கு அழைத்து வருகிருன். மைக்கேல் வைத்தியப் பள்ளிக்கூடத்தில் படித்து அப்போதுதான் தேறியவன் மைக்கேலிடம் இதற்கப்புறம் லிடியாவுக்கும் அவளுடைய பாட்டிக்கும் ப்ரீதி உண்டாகிறது. ஆகவே லிடியா மைக்கேலையும் தனது விருந்துக்கு அழைக்கிருள்.

விருந்து நடந்துகொண்டிருக்கும் போது கால் பந்து விளையாட்டில் பிரபால்யம் பெற்ற பாப் அவளது காதலைக் கவர்கிருன். இருவரும் ஒருவரையொருவர்: பரிபூரணமாக நேசிக்கின்றனர். அந்த விருந்தில் இளம் காதலர். இருவரும் அபரிமிதமாகக் குடித்து விடுகின்றனர். லிடியா வீடு திரும்பிய போதும் அவளுக்குக் குடி மயக்கம் தெளியவில்லை: கால் பந்து விளையாட்டைப்பற்றியே பிதற்றுகிருள்: இதைக் கண்டதும் அவளுடைய பாட்டிக்குக் கோபம் அதிகரிக்கிறது.

மைக்கேலும் லிடியாவை முழுமனதுடன் காதலித்தான், மைக்கேலின் வைத்தியசாலைக்குப் போய் பாப் வில்லார்டுடன்தான் சேரக் கூடாது என்று தனது பாட்டி கூறுவதாகவும், ஆகவே இருவரையும பிரித்துவிட அவள் உத்தேசித்திருப்பதாயும், இதற்காக பாப் வில்லார்டுடன் வெளியே ஓடிப் போகத்தான் தீர்மானித்திருப்பதாகவும் லிடியா தெரிவிக்கிருள். அன்று மாலை மாஜிஸ்திரேட்டை மைக்கேல் வேறு ஒரு இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விடுகிருன், லிடியாவும்பாப் வில்லார்டும மாஜிஸ்திரேட் வருகைக்காகப் பல மணி நேரம் காத்துப் பார்த்தும் பயன் இல்லை, பிறகு திரும்பி விடுகின்றனர். பாப் இருவருக்குமாக போஸ்டன் ஹோட்டலில் ஒரு அறையைத் தயார் செய்து சாப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்கிருன். இங்கும் பாப் அதிகம் குடித்து வெறிபிடித்தாடுகிருன். இதைக் கண்டு லிடியா மனம் சகிக்கவில்லை: அழுதுகொண்டே அவள் தனது வீட்டிற்குத் திரும்பிவிடுகிருள். இது முதற்கொண்டு பாப் வில்லார்டைப் பற்றிய நினைவு அவளுக்குக் கிடையாது. அவனை முழுதும் மறக்க அவள் தீர்மானிக்கிருள்.

லிடியா போன்ற யுவதிகளுக்கு இத்தகைய அனுபவம் விபரீதமாகிறது. இதற்கிடையில் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தம் ஆரம்பமாகிறது. மைக்கேல்ஓர் துருப்புடன் க்யூபாவுக்குப் புறப்படுகிருன். மைக்கேல் துருப்புடன் புறப்பட்டுப் போகும்போது ஒரு சிறுவன் அவனையண்டி, அந்தத் துருப்புக் கொடியின் வர்ணம், துருப்புகளின் உடுப்பு இவற்றை எல்லாம் விஸ்தாரமாகத் தெரிவிக்கும்படி வேண்டுகிருன். அந்தச் சிறுவன் குருடன் என்பதை அவள் கண்டதும், கண் பார்வையற்ற குழந்தைகளுக்காக ஒரு தனி விடுதியை ஸ்தாபிக்க அவள் தீர்மானித்து, அவ்விதமே செய்கிருள்.

இந்த விடுதிக்குத் தான் ப்ராங்க் ஆப்ரோ வருகிருன். ப்ராங்க் ஒரு குருடன்: பியானோ வாசிப்பதில் நிகரற்றவன். லிடியாவின் பள்ளிக்கூடத்தில் போதிக்கத்தான் விரும்புவதாகவும் அவன் தெரிவிக்கிருன். லிடியாவை அவனும் காதலிக்கிருன். பிறகு யுத்தம் முடிவாகிறது: மைக்கேல் திரும்பி வருகிருன், லிடியாவின் உள்ளத்தில் மட்டும் மைக்கேலிடமே காதல் அதிகரித்து நிற்கிறது.

பிறகு ஒரு நாள் தைர்யமும் திடமும் வாய்ந்த ரிச்சர்ட் மேஸனை அவள் சந்திக்கிருள், இருவருமாக இரண்டு வார காலம் வெகு உல்லாஸமாகவும் இன்பகரமாகவும் வாழ்க்கையை நடத்துகின்றனர்: பலவித சுகங்களையும் அனுபவிக்கின்றனர்: உலகத்தைப்பற்றிய சிந்தனை சிறிதாவது கிடையாது இருவருக்கும். திடீரென்று ஒரு நாள் ரிச்சர்ட் கப்பலில் பிரயாணமாகிருன்: தான் வேறு ஒருத்தியைக் காதலிப்பதாகவும் அவளிடமே தான் போவதாகவும் அவன் லிடியாவுக்கு எழுதுகிருன். அவ்வளவுதான்! லிடியாவின் ஆசை நிராசையாகிறது: பிரபஞ்சமே இடிந்து விட்டது போன்ற உணர்ச்சி பரவுகிறது அவள் உள்ளத்தில்!

இதற்கப்புறம் தன்னை மணக்கும்படி மைக்கேல் லிடியாவை வற்புறுத்துகிருன்: அப்போதும் அவளுக்கு ரிச்சர்ட் ஞாபகம் தான்! அவன் ஒருநாள் திரும்பி வந்து தன்னை ஆட்கொள்வான்

(அடுத்த பக்கம் பார்க்க)



சென்றவார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நியூஜிலந்தைப் போலவும், தலா எழுவது அல்லது என்பது லட்சம் பேர்களையுடைய ஆஸ்திரேலியா அல்லது தென்னுப்பிரிக்காவைப் போலவும் மேற்படி ராஜ்யங்கள் சுயேச்சைத் தன்மையுடனிருக்கலாம்.

* * * *

ஸர் ராமஸ்வாமிமுதலியார் பேட்டி

"நான் வெறும் கிராமபோனுக இருக்கமாட்டேன். இன்றுஇந்தியாவில் நடப்பவற்றை உள்ளதை உள்ளவாறு எடுத்துரைப்பேன். காங்கிரஸ், முஸ்லிம் லீக், இதர ராஜீயக் கட்சிகள் இவற்றின் கருத்தைப் பிரிட்டிஷ யுத்த மந்திரி சபையிலும் பஸிபிக் யுத்த சபையிலும் உள்ள எனது ஸஹாக்களுக்கு எடுத்துரைப்பேன்" என்று ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியார் சென்ற 27-ந்தேதி கராச்சியில் தம்மைச் சந்தித்த பத்திரிகைக்காரர் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். லண்டனுக்குப் போகும்வழியில் கராச்சிக்கு ஸர் முதலியார் போய், அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டார்.

"லண்டனிலிருக்கையிலும் நான் வைஸ்ராய் நிர்வாகசபை மெம்பராக இருப்பேன். லண்டனில் எனக்குத்தனி ஆபீஸ் இருக்கும். அட்லாண்டிக் சாஸனம் சம்பந்தமாக இந்தியாவின் உணர்ச்சியாகதன்பதை நான் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருவேன். இந்தியாவைப்பற்றித் திட்டமாக ஒரு அறிக்கை வெளியிடும்படி நான் வற்புறுத்துவேன் என்றும் ஸர் ராமஸ்வாமி முதலியார் தெரிவித்தார்.

* * * *

மத்ய சட்ட சபை

செப்டம்பர் 14-ந் தேதி முதல் நடக்க விருக்கும் மத்திய சட்டசபை விசேஷக் கூட்டத்தில் ஐந்து நாட்களில் இரண்டு நாட்கள் இந்தியாவின் பொதுவான ராஜீய நிலையைப் பற்றி விவாதம் நடக்கும். இது சம்பந்தமாக கனம் ஆனே கொண்டு வரவிருக்கும். ஒரு பிரேரணையைப் பற்றி 15, 16-ந் தேதிகளில் விவாதம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

பத்திரிகை நிர்ப்பந்தம்

புதிய டில்லியில் கூடிய அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டி, பின்வரும் அறிக்கையை வெளியிட கன்வீனர் ஸ்ரீ ஜே. என். ஸஹானிக்கு அதிகாரமளித்தது:

"அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டி கூட்டம் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் நடந்திருக்கிறது. கமிட்டிக்கும் ஸர்க்காருக்குமிடையே நடந்த விவாதத்தின் பயனுக சிற்சிலவகைச் செய்திகளைப் பிரசுரிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கமிட்டிகளுடன் ஆராய்ந்துபார்க்கும் விஷயத்தில் புதிய முறையொன்று இப்பொழுது வகுக்கப்பட்டு வருகிறது. இப்புதிய முறை அனுஷ்டானத்துக்கு வந்ததும் தற்போதுள்ள நிர்ப்பந்தங்களைச் சர்க்கார் வாபீஸ்பெறுவர். புதிய முறை பற்றிய விவரங்களில் முடிவு ஏற்பட்டதும் அதுகுறித்து ஒரு அறிக்கை வெளியிடப்படும்.

ஆகவே இப்பொழுது நின்றுள்ள பத்திரிகைகள் மீண்டும் வெளிவர ஆரம்பிக்குமென்று நிரந்தரக் கமிட்டி நம்புகிறது.

காவலில் வைக்கப்பட்டிருக்கும் மகாத்மா காந்தி, இதர தலைவர்களின் தேக நிலைமை விஷயத்தில் பொது மக்கள் மிகுந்த கவலை கொண்டிருப்பதால் அது குறித்து சர்க்கார் அவ்வப்பொழுது அறிக்கைகள் வெளியிடுவது உசிதமென்று கமிட்டி அபிப்பிராயப் படுகிறது.

* * * *

ஆனந்த பவனில் சோதனை!

சென்ற மாதம் 29-ம் தேதி இரவு அலஹாபாத் ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்தரவுப்படி ஆனந்த பவனத்தைப் போலீஸார் சுமார் 4-மணி நேரம் சோதனையிட்டனர். நடுராத்திரி வரை சோதனை நடந்தது: போலீஸார் சில புத்தகங்களையும் காரியக் கமிட்டியார் தயாரித்த நகல் தீர்மானத்தையும் கைப்பற்றினுர்கள்.

மாஜிஸ்டிரேட் பிறப்பித்த உத்தரவில் ஸ்ரீமதி சந்த் பண்டிதர் வீட்டில் (ஆனந்த பவன்) யுத்த முயற்சிக்கு விரோதமான காரியங்கள் நடப்பதாகவோ நடக்க முயற்சி செய்யப்படுவதாக சந்தேகிக்கப்படுவதாகவோ குறிப்பிட்டிருந்தார்.

* * * *

கொழும்புக்கு ஆயிரம் பசுக்கள்

கொழும்பில் பால் நெருக்கடி ரொம்ப கடுமையாக இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலிருந்து 1000 பசுமாடுகளை அனுப்ப வேண்டுமென்று ஏற்கனவேயே ஆர்டர் கொடுக்கப்பட்டதென்றும் தற்காலிகமாக ஓர் இடத்தைப் பெற்று மாடுகளை வைகக குவாரன்டைன் ஸ்டேஷனுக்கு ஏற்பாடு செய்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது.

ஐரோப்பியச் செய்திகள்

அமெரிக்க நாசகாரி மூழ்கியது

யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான இன்கிராம் என்ற நாசகாரி அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் மூடுபனி காரணமாக இன்னொரு கப்பலுடன் மோதி மூழ்கிப்போனதாக கடற்படை இலாகா அறிவிக்கிறது.

* * * *

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்ற எண்ணம் தான் அவளுக்கு! எனினும் மைக்கேலை மணக்க சம்மதித்த பின் விவாக தேதிக்குச் சற்று முன பாட்டி இறந்து விடவே, லிடியா சொந்த ஊா வந்து சேர்ந்து, இனி மைக்கேலை மணப்பதில்லை என்று முடிவு செய்துவிடுகிறுள்.

டாக்டர் மைக்கேலுடன் தேனீர் அருந்திக்கொண்டிருக்கும் சமயம், ரிச்சர்ட் அங்கு வந்து சேருகிறுன். அந்த இடத்தில் ஐந்துபேர் மறுபடியும் கூடுகின்றனர்! இதுகாறும் பிரிந்திருந்தவர் மறுபடியும் சந்திக்கின்றனர்.

இந்தப் படத்தில் மெர்லி ஆபிரான் (லேடி அலக்ஸாண்டர் கோர்டா) லிடியாவாக நடிக்கிறுர் எட்னு மே ஆலிவர். ஆலன் மார்ஷல் முதலியோர் இதில் நடிக்கின்றனர். இந்தப் படத்தைச் சிறப்பாக டைரக்ட் செய்தவர் ஸர் அலக்ஸாண்டர் கோர்டா.

ஸர் ஸிக்கந்தர் நம்பிக்கை

ஸர் ஸிக்கந்தர் ஹயத் கான் சமீபத்தில் கெய்ரோவுக்குச் சென்றிருந்தபோது மிஸ்டர் சர்ச்சிலுடன் நெடுநேரம் சம்பாஷித்தார். இதுபற்றி ஸர் ஸிக்கந்தர் கூறியதாவது:—

"பல்வேறு முனைகளில் இந்தியத் துருப்புகள் செய்து வந்த அரிய வேலையை மிஸ்டர் சர்ச்சில் பெரிதும் பாராட்டினுர். காங்கிரஸ் மேற்கொண்டுள்ள துர்ப்பாக்கியமான வேலை முறை பற்றி மிஸ்டர் சர்ச்சில் மிக வருத்தம் தெரிவித்தாராயினும், இந்தியாவில் நடக்கும் யுத்த முயற்சியைப் பாராட்டினுர். அவருடன் நான் பேசியதன் பலனுக இந்தியாவுக்கு நியாயம் வழங்கப்படும் என்பதுபற்றி எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை"

தஞ்சை ஸ்ரீமான் ராவ்பஹதூர் A. Y. அருளாநந்தசாமி நாடாருக்கு உபசாரம்

தஞ்சை ஸ்ரீமான் ராவ்பஹதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்களுக்கு 11-6-42-ல் நமது மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடின தினத்தன்று கவர்ன்மெண்டாரால் "ராவ்பஹதூர்" என்கிற பட்டத்தை அளித்ததற்காக, தங்கள் சந்தோஷத்தைக் காண்பிக்கும் பொருட்டு 27-8-42 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீஸில் நாடார்குல ஜன சங்கத்தின் சார்பாக திருவாளர்கள் வி என், அண்ணுமலை நாடார் S. ஆறுமுக நாடாரவர்களால் அளித்த தேனீர் விருந்தின் வைபவத்திற்கு நகரிலுள்ள பிரபல உத்தியோகஸ்தர்களும், ஸ்ரீமான்களும் வந்திருந்து சிறப்பித்தனர். அவ்வமயம் இந்தப் புகைப்படமும் எடுக்கப்பட்டது. காஞ்சீபுரம திருவாளர் A. K. தங்கவேல் முதலியார் தலைமையில் திருவாளர் C. N. அண்ணுத்துரை யவர்களால் நாடார் அவர்களின் தரும குணுதிசயங்களைப் பற்றிப் பேசியும், நாடார் குல சங்கத்தின் சார்பாக உபசாரப் பத்திரம் ஒன்றும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் ராவ்பகதூர் நாடார் அவர்கள் தனக்குத் தேனீர் விருந்து அளித்து, உபசரணைப் பத்திரம் வாசித்தளித்ததற்கும், இன்னும் சில நண்பர்கள் புகழ்ந்து பேசியதற்கும் வெகு தாழ்மையுடன் வந்தனமளித்தார். பிறகு தற்காலம் நடைபெறும் மகா யுத்தத்தின் அகோர சம்பவங்களினின்று எல்லோரையும் காப்பாற்றும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துப் பேசி முடித்தார். அதன்பின் சைதாப்பேட்டை திருவாளர் S. N. தங்கவேல் நாடார் அவர்களால் வந்தனேபசாரம் கூறப்பட்டு வைபவம் சிறப்பாய் முடிந்தது.

சிறுவர் பகுதி

★

ஜீவ ஹிம்ஸை

★

"கோபு"

ஒரு நாள் கைலாஸ பர்வதத்தில் சுப்ரமணியக் கடவுளும் கணபதியும் ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். கணபதிக்கு தொந்தி பெரிதானதால் அவர் மிகக் களைப்படைந்தார். அவர் பெரு மூச்சு விட்டபடியே, "தம்பி, இனி மேல் என்னுல் ஓடியாடி விளையாட முடியாது. ஆகையால், இருவரும் இனி மேல் உட்கார்ந்து ஏதாவது விளையாடுவோம்" என்றுர்

சுப்ரமணியனுக்கு ஓடி விளையாடுவதிலேயே பிரியமிருந்ததால் அவர் கணபதியின் சொல்லுக்கு இசையாமல் அவரை ஏளனம் செய்து விட்டு மறுபடியும் ஓடி விளையாடுவதிலேயே சிந்தனை செலுத்தினுர்.

கணபதி, சுப்ரமணியன் ஏளனம் செய்வதைக் கண்டு வெட்கினுர். அவர் மனதில் ஏற்பட்ட கோபத்தையும், வருத்தத்தையும் அடக்கிக் கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார். சுப்ரமணியனே, ஒரு குன்றிலிருந்து மற்ருென்றுக்குத் தாவியும், மலை உச்சிகளில் ஏறிக் குதித்தும், நீர் வீழ்ச்சிகளில் விளையாடியும் வந்தார். சுப்ரமணியன் விளையாடிக்கொண்டிருக்கும் மலையில் ஒரு பாறையின் இடுக்கில் ஒரு பூனைக்குட்டி பதுங்கியிருந்தது. நீர் அருவியில் தன் கால்களை துளாவிக்கொண்டிருக்கும், சுப்ரமணியனின் திருஷ்டியில் பூனைக்குட்டி பட்டது. அவருடைய விளையாட்டு சிந்தனையெல்லாம் பூனைக்குட்டி மீது திரும்பியது. அவர் அந்த பூனைக்குட்டியைப் பிடித்து விளையாட நினைத்தார். அதனிடம் ஓடி, அதைப் பிடிக்க நினைத்தார். இவரைக் கண்டவுடன் அப் பூனைக்குட்டி பாய்ந்தோட ஆரம்பித்தது. அவர் அப் பூனைக்குட்டியை நெடுந்தூரம் துரத்திச்சென்றுர். அது தன் கைக்கு அகப்படாமையால் அதன் மீது கடும் கோபங் கொண்டார். நெடுந் தூரம் ஓடியதினுல் பூனைக்குட்டி களைப்படைந்தது. சுப்ரமணியன் பூனைக்குட்டியின் வாலைக் கையினுல் பற்றிக் கொண்டு, அதை 'தரதர' வென்று பிடித்து இழுத்துக் கொண்டு கணபதி இருக்குமிடம் வந்தார்.

கணபதி இக்காக்ஷியைக் கண்டு பிரமிப்படைந்து "தம்பி, வாயில்லா ஜீவன். அதை ஹிம்ஸிக்காதே மஹாபாபம்!" என்றுர்.

விளையாட்டிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்தி இருந்த சுப்ரமணியன் இவ்வார்த்தைகளுக்கு செவி சாய்க்கவில்லை. விஷமம் அதிகமாயிற்று. அப் பூனைக்குட்டியை பலவிதமாக ஹிம்ஸிக்கத் தொடங்கினுர். பூனைக்குட்டியின் தோல் வயண்டு அதன் தேகத்திலிருந்து ரத்தம் கசிந்தது. நேரம் சென்றது! சுப்ரமணியன் களைப்புடைந்தார். பூனைக்குட்டியையும் தன் கையிலிருந்து விடுதலை செய்தார். பூனைக்குட்டி 'பிழைத்தோம்' என்று பாய்ந்து ஓடியது.

பிறகு சுப்ரமணியனும் கணபதியும் தம் தாயைக் காணச் சென்றனர். பார்வதி தேவி ஒரு பாறைமீதமர்ந்து ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். சுப்ரமணியன் அவளது மடி மீது போய் அமர்ந்தார். பார்வதி தனது வலக் கரத்தால் அவரை அன்பாக அணைத்துக் கொண்டாள். பார்வதி தேவியின் கையில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவள் கையில் யாரோ புராண்டியது போல் ரணகாயம் ஏற்பட்டிருந்தது சுப்ரமணியனின் கண்ணில் பட்டது. "அம்மா, உன் கையில் காயமாயிருக்கிறதே? ரத்தம் வருகிறதே? என் அம்மா" என்று பரிவுடன் கேட்டார்.

அதற்குப் பார்வதி, "கண்ணே! உலகிலுள்ள சர்வ ஜீவன்களுக்கும் தாய் நான் தான். நீ உனக்கு மாத்திரம் தாய் நான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறுய். உலகில் எந்த ஜீவனுக்கும் கஷ்டமுண்டாகாமல் நான் பார்த்துக் கொள்வேன். அப்படியும் அவைகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் அந்த கஷ்டத்தை எல்லாம் நான் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றுள்.

"இப்பொழுது எந்த ஜீவனுக்குக் கஷ்டமேற்பட்டது?" என்றுர் சுப்ரமணியன்.

அதற்குப் பார்வதிதேவி "பாவம்! ஒரு பூனைக்குட்டி. அதை நீ ஹிம்ஸித்தாய். அதன் தேகத்தில் காயமுண்டானதால் என் தேகத்திலும் காயமேற்பட்டு ரத்தம் கசிகிறது" என்றுள்.

"அப்படியானல் உன் கையிலே வலிக்குமோ?" என்றுர் சுப்ரமணியன்.

"ஆம்! எனக்கும் வலி எடுக்கும். ஆனல், எல்லாவற்றையும் நான் தாங்கிக் கொள்வேன்" என்றுள் பார்வதி.

"இனி மேல் நான் ஒரு பிரயாணியையும் ஹிம்ஸிக்கமாட்டேன்" என்றுர் சுப்ரமணியன்.

"அது தான் நல்ல குழந்தைக்கு அடையாளம்" என்றுள் பார்வதி.

அதற்கப்புறம் சுப்ரமணியன் விஷமமே செய்வதில்லை. எல்லாப் பிராணிகளிடமும் அன்பு காட்டினுர்.

தமிழ் நூல்கள்

மாய ப்ரபஞ்சம	1	0
சந்திரமண்டலம்	1	0
புத்தியே புதையல்	0	14
கதம்பமாலை	0	12
பட்டமோ பட்டம்	0	10
மகிழ்ச்சி உதயம்	0	10
ஆனந்தஸாகர்	0	8
வீரவஸந்தா	0	8
நளினசேகரன்	0	8
மூன்று வைரங்கள்	0	8
வத்ஸகுமார்	0	8
படகோட்டி	0	8
மாலதி	0	8

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சலவைக்குச் சிறந்தது.